[illegible] 2141 KUDI ARASU. தனிப் பிரதி விலை { உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா உள்நாடு ... ரூ 3—0 | | |
| 6 மாத சந்தா ,, ... ரூ 1—12 | | |
| வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0 | | |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12. | |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2 | |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் | |

மாலை 3 | ஈரோடு, பிரபவ௵ மாசி மீ 21ந் (4—3—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 45.

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 கராட் ரோல்டு கோல்டு பின்புறம் கிக்கிரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேல்கண்டபடி பௌண்டன் பேனா இனுமாய் அனுப்பப்படும். அபூர்வமான விலை ரூ. 4-12-0. / 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

10-வருஷ உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக்கூடிய ஸ்வர சுத்தம், சாரீரம், கம்பீரம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக் கருவிகளும் உத்தரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானால் அனுப்பப்படும்.

பழனி கம்பெனி, கல்கத்தா ஆர்மோனியம் ஏஜென்சி, 411, தங்கசாலை வீதி, சென்னை.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனும்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

டேபில் டைம்பீஸ் இனும் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் மேல் வைக்கக்கூடிய அழகான டேபில் டைம்பீஸ் இனுமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். இரண்டுக்கும் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் ரூ. 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ. 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எது வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3¼"x 2¼" ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனும்! இனும்!!

சாரவிவேகி சதானந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனுமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாரு இராமச்சந்திர புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் திட்டமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூல்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொருத்தமில்லாமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதகக் குறிப்பையாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இந் நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தகலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?
31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.
32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.
33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

## வாஸன் புஸ்தகசாலை,

தபாற் பெட்டி நெ. 119

97, அன்னுபிள்ளை தெரு, ஜி. டி. மதறாஸ்.

# உண்மையான மதத்தை வெளிப்படுத்துவதே "குடி அரசின்" பிரசாரம்.

## கைவல்ய சாமியார் எழுதுவது

"குடி அரசையும்" அதன் பிரசாரத்தையும் உங்கள் புத்தியின் யுக்தியினலும் சாஸ்திர ஆராய்ச்சியாலும் நம்பச்சொல்லுகிறேமே யொழிய நாயக்கருடையசிநேகப்பற்றுதலாலும் பார்ப்பனர்களிடமுள்ள மனத்தாங்கலாலும் நாங்கள் சொல்லுவதில்லை. நான் சொல்வதெல்லாம் சாஸ்திரத்திலுள்ளவை. ஆராச்சி செய்தவர்களின்முடிவான வார்த்தை. அன்னிய நாட்டினர்களின் அனுபோகத்திலுள்ள பிரத்தியட்சம். கடவுள் இல்லை என்று சொல்ல 'குடி அரசு'க்கு அவசியமில்லை. கடவுள் உண்டா? இல்லையா? என்று விவகரிப்பது 'குடி அரசின்' வேலையுமல்ல. எப்பொருளிடத்திலும் ஒரு சக்தி வியாபித்திருக்கிற தென்பதை 'குடி அரசின்' பிரசாரம் தடுக்கப் புறப்பட்டதுமன்று. பஞ்சபூதமே கடவுள் என்பவர்கள், அதற்கு மேற்பட்ட சக்தி இருக்கிற தென்கிறவர்கள், அசற்த கடவுள் என்று பேர் கொடுத்தவர்கள், இவர்களிடம் தர்க்கம் பண்ண 'குடி அரசு' வந்ததுமன்று.

தத்துவ விசாரணையில் முடிவடைந்த கடவுளுக்கு நாம் செய்யும் பணிகள் பிரயோஜனப்படவில்லை என்றும், பிரயோஜனமில்லை என்றும், அந்த கடவுள் எல்லாருக்கும் பொதுவானவரென்றும், ஒரு கூட்டத்தாருக்கு மட்டும் அந்த கடவுள் பந்துவல்ல வென்றும் அவன் தின்று திருப்தியடைய காண்பதே அவர்தொழிலல்லவென்றும், அவரைத் தொட்டால் தீட்டுப்படமாட்டாரென்றும் 'குடி அரசு' சொல்லுகிறது. ஒருத்தியின் புருஷன் சாக, செத்தவன் பிழைத்து வந்தான் என்று அவனைப் போன்ற வேஷந்தரித்து நடித்து அவள் கற்பைக்கெடுத்து அவளால் சாபம் பெறும் கடவுளைப்பற்றியும், காமசாஸ்திரம் பழக ராஜாவின் அரன்மனைக்குள் ராஜ தேகத்திற்குள் நுழைந்து போய் ராஜ ஸ்திரீகளின் கற்பைக் கெடுத்த லோக குருவைப்பற்றியும், இவர்களைப் போன்ற கடவுள் குரு இவர்களைப்பற்றியும் எழுதியிருக்கும் இந்து மதம் ஒழிந்து போனல் மிஸ்மேயோவைப் போன்றவர்கள் இந்தியாவைப்பற்றி புஸ்தகம் எழுதவேண்டிய வேலை இருக்காதென்றே 'குடி அரசு' சொல்லுகிறது.

ஜனசமூகத்தின் உயிருக்கு நல்ல வழிகாட்டும் சக்திக்கு ஆத்மத்யாகமும், அனுதாபத்திற்கும் கூட்டுத்தொழிலுக்கும் இடமாகிய தர்ம்சிந்தையுமே வேண்டுமென்கிறது 'குடி அரசு'. ஆழ்ந்திருக்கும் வஸ்துக்களுடன் அனுகூல சம்மந்தமுள்ள அதன் தொழிலை 'குடி அரசு' குற்றம் சொல்லாது. மதம் தெய்வபக்தி என்ற பகட்டான பெயர் புனைந்து கொண்டு தன்னை மேலான தர்மமாகக் காண்பித்துக்கொண்டு இயற்கையிலே தீங்கில்லாத ஜனங்களை மதமென்றும், சடங்கென்றும், தெய்வமென்றும், அடிமை புகுத்துவதையே 'குடி அரசு' குற்றம் சொல்லுகிறது. அனுஷ்டானத்திற்குப் பின்னே மறைந்து நிற்கும் உள்ள நிலைதவருகவிருந்தால் அனுஷ்டானம் இன்றில்லாவிட்டாலும் நாளைக்குத் தீமையே உண்டாக்கச் செய்யும் என்பது போல் கடவுள் மதம் என்னும் பேரால் நாம் அனுஷ்டித்த காரியங்களெல்லாம் நன்மையைக் கொடுக்காமை பிரத்தியட்சத்திலிருப்பதால் சரியான பக்தன் தன்னைத் தெரிந்து எப்படி கடவுளாகிருனே அதுபோல இந்த உலகங்களிலுள்ள காரியங்களுக்கும் வேறு உலக மொன்றிருந்தால் அங்கும் மனிதனுயிருக்க சுயமரியாதை வேண்டுமென்றே 'குடி அரசு' சொல்லுகிறது.

'எதற்கும் தத்துவார்த்தம் சொல்லலாம். எதிலும் கடவுள் ஜீவநாடி ஓடிக்கொண்டுதானிருக்கும். "கூட்டோடும் வண்டிக்கார, குயிலாளை ஏற்றி வைத்து, தட்டிவிடு வண்டிக்கார, 'தர்மசத்திரம் போய்ப்பறுப்போம" என்ற இப்பாட்டு வண்டிக்காரர்களின் வழிப்பயணத்தில் அவர்கள் மன உற்சாகத்திற்குப் பெண்ணைப்பற்றி பாடினதல்லவா? "குயிலைப்போல இனபத்தையும் அதன் கீர்ம் போன்ற எம்பெருமானின் பாதசேவையான ஞானத்தையும் அடைந்து கொண்டு கூடாக உடைய ஆத்மாவே! கடவுளின் மோட்சபூமியில் போய் படுத்துக்கொள்" என்னும் தத்துவமா அந்த பாட்டிற்கு அர்த்தம்? பத்தகோடிகளுக்கு அந்த அர்த்தம் பொருந்தினலும் வண்டிக்காரர்களின் கூட்டத்திற்கும செம்மாங்குக்கும் பொருந்துமா? காமிகளுக்கும் வாலிபர்களுக்கும் பெண்ணைப்பற்றிய அர்ததம் தானேபடும். எதற்கும் உள்ளது உள்ளபடியே அர்த்தம் வந்து விட்டால் மேலல்லவா? தாய்க்குப் பிறந்த நாயே என்று ஒருவனைத் திட்டினல், திட்டினவன் திட்டைக்கேட்டவன் மனதில் திட்டின வார்த்தை ஊடுருவி பாய்ந்ததென்று மனம் திருப்தியடையும்போதும் திட்டைக்கேட்டவன் கோபிக்கும் போதும் தத்துவ அர்த்தம் பிரயோஜனப்படுமா? தத்துவ அர்த்தமதிலுண்டா? இரண்டு பேர்களும் தத்துவ அர்த்தத்தை நினைத்தார்களா? தன்னிடமிருந்த ரொட்டியை நாய் கௌவிக்கொண்டு போக நெய்யையும் நாயிடம் எடுத்துக்கொண்டு போன கபீர்தாசரைப் போன்றவர்களுக்கு இதில் தத்துவ அர்த்தம் படலாம். மூன்றுவது மனிதன் தத்துவார்த்தம் கல்பித்து சமாதானப்படுத்தினல் அந்த இடத்தில் உலகத்திற்கும் காரியத்திற்கும் அவை எப்படிப் பொருந்தும். "ந என்கிற பஞ்சாட்சர எழுத்தும் ய என்கிற கடை எழுத்தும் நடு வெழுத்தைச் சேர்த்துப் பிடித்து பஞ்சாட்சரமாய் பரமசிவனல் படைக்கப்பட்டீங்கள் பரமசிவனுக்குப் படைத்துணை பைரவரின் வாகனமான நாயைப்போன்று நன்றியுடையவராகயிருங்கள்" என்ற அர்த்தம் தான் அதற்கு. உங்கள் அறிவிற்கு தகுந்தவாறு பெரியவர்கள் அமைத்தார்கள். தத்துவார்த்தம் உள்ளே அடங்கிக்கிடப்பது உனக்கு விளங்கவில்லை. அது வேசத்திலிருக்கிறது. அதை நீ படிக்கப்படாது. அந்த அர்த்தத்திலேயே உன்னை அவன் திட்டினன். நீயும் கேட்டுக்கொண்டாய் உங்களுக்கு அதை நாங்கள் சொல்லப்படாது. நீங்களும் தெரிந்து கொள்ளப்படாது. எங்கள் பாதத்தை சேவை செய்வதே உங்களுக்கு புண்ணியம். ராமனும் அப்படியே செய்தார். கிருஷ்ணனும் அப்படியே நடந்து காட்டினர். பார்வதி நந்திக்கும், நந்தி ரிஷிகளுக்கும், ரிஷிகள் லோக உபகாரமாக எங்களுக்கும், சொன்னர்கள். இதை நம்பாத அக்கினிமகா சூரன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணினல் எரிக்கப்பட்டான். அதைக்கேட்காத பக்கா ராக்ஷதன் விஷ்ணுவின் சக்கரத்தால் கொல்லப்பட்டான். எதையும் நம்பாத கும்பநிகும்ப னென்னும் கொடியோன், விஷ்ணுவும் சிவனும் கூடி ஆறு தேவ வருடம் புணர்ந்து அதனல் உண்டான வியர்வையை பிர்மா பக்தியோடு சாப்பிட உடனே அவர் முதுகிலிருந்து மூன்று பெண்கள் உற்பவித்து மும்மூர்த்திகளையும் விவாகம் செய்து மூன்று நதியாக அந்நதியில் அவன் முழுக அவன் பாவமெல்லாம் போயிற்று. ஆனதால் நீங்கள் எல்லாம் பாப்பானுன எங்களுக்கே எல்லாம் கொடுங்கள். அதற்குப்பின் கடவுளுக்குச் செய்யுங்கள். நாங்களே அங்கும் அதிகாரிகளானதால் எங்களுக்கே அவை வந்து சேரும்" என்பதே இப்பொழுது இந்து மதமாகவிருப்பதால் அந்த இந்து மதம் ஒழியவே 'குடி அரசு' பிரசாரம் செய்கிறது.

தென் தேசத்து ஜனங்களெல்லாம் சூத்திரர்களான தாசி மக்களென்று ஸ்மிருதிகளில் எழுதி வைத்திருப்பதற்கு சைவர்களும் வைஷ்ணவர்களும் என்ன பரிபக்குவமும் தத்துவமும் தத்துவார்த்தமும் சொல்லுகிறார்கள். சூத்திரன் என்றால் கண்டதைப் புசிப்போன், ஆசாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், அடிமை என்று ஐந்தாம் வேதமான பாரதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இத்தன்மையோடு கூடின முதலியார், பிள்ளை, நாயுடு, கவுண்டர், நாயக்கர், நாட்டார் ஆகியவர்களும் இன்னும் மற்ற தமிழ் தேசத்தவர்களும் எப்படி ஆஸ்திகனுக முடியம். எந்தப் புஸ்தகத்தில் எப்படியிருந்தால் நமக்கென்ன என்று திண்ணையிருந்து பக்திபேசலாம். புஸ்தகத்திலிருப்பது போலவே சிவில் சட்டத்திலும் எழுதப்பட்டு வழக்கத்திலும் நியாயத்தீர்ப்பிலும் செல்லுபடியாகிறது. எந்த இந்து சாஸ்திரத்திலும் சூத்திரனுக்கு பிராமண ஊழியம் தவிர வேறு ஒன்றும் விதிக்கவில்லையே. சூத்திரனுக்கு கர்மம் பிராமண ஊழியம். பக்தி செய்யப்படாது. செய்த சூத்திரனை ராமரே தலையை வெட்டினர் என்று ராமாயணம் சொல்லுகிறது. யோகமும் ஞானமும் காதில் கேட்டாலே கடுமையான தண்டனை சாஸ்திரத்தில் விதித்திருக்கையில் சாஸ்திரத்திற்கு விரோதம் எப்படிச் செய்வது. செய்தால் கடவுள் கோபமும் நரகமும் வருமென்று பக்கம் தவருமல் எழுதியிருக்கும் இந்து மதம் ஒழிய வேண்டுமென்றால் அதில் பாப்பான் தவிர மற்றவர்களுக்கு என்ன நஷ்டம். தாசி மகன், ஒழுக்கமில்லாதவன், ஆசாரமில்லாதவன், கண்டதைப் புசிப்பவன், அடிமை என்னும் அர்த்தத்தோடு கூடின சூத்திர ஜாதியானிடம் எங்களுக்கு யாதொரு தர்க்கமுமில்லை. எந்த உயர்ந்த ஜாதி சைவனையும உயர்ந்த ஜாதி வைஷ்ணவனையும் ஒழுக்கம் கெட்டவர்கள் என்று எழுதி வைத்து அதன் ஆசாரப்பிரகாரமே எல்லா ஏற்பாடும் நடத்தி வருவதினல் அதைக் 'குடி அரசு' ஒத்துக்கொள்ளாது. பாப்பான் தய்வால் பிழைப்பவன் மட்டும் அதை ஒத்துக்கொள்ளட்டும். பாப்பானுக்கு அடிமையாக இருந்து ஊழியம் செய்வதே நமக்கு விதித்தமதமாகவும் அதை நிறைவேற்றிவைப்பதே கடவுளுக்கு சதா வேலையாகவுமிருக்கும் ஆஸ்திகத்தை விட்டு விட்டு, மரியாதை, சமத்துவம, உண்மை, தர்மம் முதலிய குணங்களோடு கூடின நாஸ்திகமாகயிருப்பது மேலென்று நினைக்கிறது 'குடி அரசு'.

எங்கள் 'குடி அரசு' எட்டிலுள்ளதையே ஆதாரமாகக்கொண்டெழுதுகிறது. பக்திமான்கள் அதிலுள்ள ஆடாசங்களையும் பிரயோஜனமற்ற கிரிகைகளையும் மாற்ருமல் 'குடி அரசை' வன் கோபிக்கவேண்டும். நாயக்கரவர்களுக்கு இயற்கையாலுண்டான அறிவும், தர்க்கித்து உண்மையை உணர்ந்த தைரியமும், தங்கள் தங்கள் தேசத்தை முன்னுக்கு கொண்டு வந்தவர்களின் சரித்திரமும், அனுபோகமும், அதனுலுண்டான ஆராய்ச்சியுமே குடி அரசின்'கொள்கையின் பிரசாரத்திற்குப் போதுமானதாயிருக்கிறது. சர்வம் சிவம் சர்வம் விஷ்ணு என்பதில் எங்களுக்குச் சண்டையில்லை. சிவனைப்பற்றி விஷ்ணு புராணத்திலும், விஷ்ணுவைப்பற்றி சிவபுராணத்திலும் தாழ்மையாய் பலர் அசுசிப்படும்படியாய் எழுதி வைத்து, ஒருவரோடு ஒருவர் சண்டையிடும்படியாய்ச் செய்து, அண்ணனுக்கும் தம்பிக்கும் வந்த விவகாரத்தில் அண்ணன் தம்பியான இரண்டு வக்கீல்கள் இருவர் கேஸையும் கூடிப்பேசி பணம் பறிக்க பணையையும் விவகாரத்தையும் வளர்ப்பது போல் மதப்பிரிவுகளை உண்டாக்கி ஜாதியைப் பெருக்கி ஒன்றுக்கொன்று ஒட்டாமல் தமிழ் தேசத்தைக் கெடுத்தது புராண இதிகாசங்களல்லவா? அவை இது வரையிலுமிருந்து செய்த நன்மை என்ன

[இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.]

# இன்சொல்லும், திருவள்ளுவரும்.

## சாமி சிதம்பரனார் எழுதுகிறார்.

### கட்டுரை II.

ஒருவன் நல்லவனாக நடந்துகொள்ள வேண்டுமாயின், அவன் கூறும் மொழிகள் யாவும் இனிமையுடையனவாயிருத்தல் வேண்டும். இனிமையென்பது பிறர்க்கு நன்மையைத்தரும் சொல்லாகும். ஒருவன் சொல்லைக்கொண்டே அவன் உள்ளக்கிடக்கையை யறியலாம். தூய்மையான உள்ள முடையவர்களிடத்திலிருந்தே தூய்மையான சொற்கள் தோன்றும். உலகினர்க்குநன்மை செய்யும் எண்ணமுடையவர்களிடத்திலிருந்தே நன்மையைத் தரும் இனிய சொற்களுமுண்டாகும்.

இன் சொல் என்பது இரக்க மனம் உள்ளவர்களிடத்துள்ளதாகும். அச் சொல்லிலும் இரக்கத்தன்மை அமைந்து கிடக்கும். அச் சொற்களில், கடுமையும், வஞ்சகமும், தந்திரமும் இருக்கமாட்டா. யாவரும் எளிதில் பொருளையறிந்துகொள்ளுமாறு வெளிப்படையான சொல்லாயிருக்கும். இத்தகைய சொல் யாவரிடத்திலிருந்து உண்டாகுமென்றால், உண்மையினதென்பதையுணர்ந்த உத்தமர்களிடத்திலிருந்துதான் உண்டாகும். இதனை (1) இன் சொல்லென்பது, இரக்கத்தன்மை பொருந்தி, வஞ்சகத்தன்மையில்லாமலிருக்கும். அது உண்மையுணர்ந்தவர்களின் வாய்ச்சொல்லாகும்.” என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

மனமுவந்து பிறர்க்கு உதவி செய்யுந்தன்மையற்றவர்களும், உண்மையான நன்மையைத் தரத்தக்க இனிய சொற்களையே மொழிவதென்னும் உறுதிப்பாடுகொண்டு ஒழுகுவார்களாயின், அவர்களும், நாளடைவில் உண்மை மனத்தினையுடையராய், உதவி செய்யுந்தன்மையை யெய்தப்பெறுவர். இரக்கமனமுடையவராய், ஈதலை மேற்கொண்டிருப்பவர்களும், முகமலர்ந்து இன்சொற் கூறும் இயல்பை இழந்திருப்பாராயின், நாளடைவில் அவர்களும், இரக்க மனத்தை யிழந்து, வன்மனத்தையடைந்து கொடுஞ்செயலை மேற்கொண்டாலும் மேற்கொள்வார்கள். ஆதலால் இனிய சொல் யாவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இதனை (2) “ஒருவன் பிறரைக் கண்டபோது முகமலர்ச்சியுடையவனாய், இனிய சொல்லையுமுடையவனாய் இருக்குந் தன்மையையடைந்திருப்பானாயின், அத்தன்மை, நெஞ்சுவந்து அவர்களுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தலினும் நன்று.” என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

பிறரை யேமாற்றும் பொருட்டு, அழகாயும், இனிமையாகவும் பேசும், போலியின் சொற்கள் இன் சொற்களாகா. அவை கேட்பதற்கு எத்துணை இனிமையுடையனவாயிருப்பினும், வன் சொற்களேயாகும். ஆதலால், உண்மையான உள்ளமுடன், நன்மை செய்யவேண்டுமென்ற மனத்துடன் அன்போடும், முகமலர்ச்சியோடும் கூறும் இன் சொற்களே இன் சொற்களென்று கூறப்படும். இத்தகைய தன்மையில்லாதவர்கள், செய்கின்ற அறங்களும் அறமாகா. அவை பிறர் தம்மைப் புகழவேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யும் வெறும் ஆடம்பரங்களேயாகும். இதனை (3) “கண்ட பொழுதே முகமலர்ந்து இனிதாகப் பார்த்து, மனத்தோடு கூடிய இன்சொல்லைக் கூறுவதிலேயே அறம் அமைந்து கிடக்கின்றது” என்று கூறுவதனாலறியலாம்.

இப்பெரிய உலகம், இன் சொல்லால் மகிழ்ச்சியடையுமன்றி, வன் சொல்லால் என்றும் மகிழ்ச்சியடையாது. ஆதலால் இன் சொல்லுடையவர்களுக்கு உலக மக்கள் எல்லோரும் நண்பினராயிருப்பார்கள். அவர்களுக்குப் பகைவர்களுமிருக்கமாட்டார்கள். எல்லோரையும். நட்பினராகப் பெற்றவர்களுக்கு இவ்வுலகில் ஒருவித துன்பமும் உண்டாகாது. அவர்கள் அடைவது இன்பமே யாகும். அவர்கள் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாகவேயிருக்கும். உலக சகோதரத்துவத்தை உண்டாக்குவதும் இனிய சொல்லாகும். ஆகையால் யாவரும், தனக்குமேற்பட்டவர் தன் கீழுள்ள வேலைக்காரர்கள் ஆகியவர்களிடத்திலும், வகுப்பு வேற்றுமை, மத வேற்றுமையின்றி எல்லா மக்களிடத்திலும் இனிய மொழிகளையே கூறவேண்டும். இதனை (4) “யாவரிடத்தும், இன்பத்தைத்தரும் இன் சொல்லையுடையவர்களுக்கு, துன்பத்தைத் தரும் வறுமை உண்டாகாது.”, என்று திருவள்ளுவர்கூறுவதனாலறியலாம்.

மக்களுக்கு இயற்கையழகே அழகாகும். செயற்கையழகு அழகாகாது. மக்களைக் கடவுள் இயற்கையாலேயே அழகு பொருந்தப் படைத்திருக்கிறார். இயற்கை யழகென்பதில் இயற்கையான நல்குணங்களும் அடங்கும். மக்களின் இயற்கையான குணம், நற்குணமே யென்பதைச் சிறு குழந்தைகளின் செய்கைகளால் அறியலாம். இனிமையாகப் பேசுவதும், முகமலர்ந்திருப்பதும், உள்ளதை உள்ளவாறே கூறுதலும், வஞ்சகம், தீச்செயல், பொறாமை முதலியவற்றை யறியாதிருத்தலும், சிறு குழந்தைகளின் தன்மை. சிறு குழந்தைகளும், ஆண்டு முதிர்ந்து உலக நடக்கைகளிற் றலையிடுங் காலத்தில்தான வஞ்சகச் செயல்களைக் கற்றுக்கொள்ளுகின்றன. ஆதலால் சிறு குழந்தைகளின் இயற்கையான நல்ல தன்மைகளினின்றும் மாறுபடாத மக்களே சிறந்தவர்களாவார்கள். அத்தகைய மக்கள் ஆண் பாலராயினும், பெண் பாலராயினும், அவர்களுக்கு பொன்னாலும் மணிகளாலும், ஆகிய கலன்கள் வேண்டியதில்லை அவர்களுக்கு இயற்கையான பருத்தி நூலாடையே அழகு செய்வதாகும், உயர்ந்த ஆடைகளாவது, பட்டாடைகளாவது வேண்டியதில்லை. சிறந்த நற்குணங்கள் எல்லோர்மாட்டும் பணிவுடையராயிருக்குந் தன்மையும், இன் சொல்லுடையவராயிருக்குந் தன்மையுமேயாகும். இவ்விரண்டு தன்மையுமுடையவர்களும், தங்களை வேறு செயற்கைப் பொருள்களால் அழகு செய்துகொள்ள வேண்டுவதில்லை. இவையே அவர்களுக்குப் பேரழகைத் தருவனவாகும். இதனை (5) “பணிவுடைமையும், இன் சொல்லுடைமையும் ஒருவனுக்கு அழகாகும். மற்ற ஆடை அணிகளாற் செய்துகொள்ளும் அழகு அழகாகாது.” என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

ஒருவன் எப்பொழுதும் பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களையே ஆராய்ந்து சொல்லிக்கொண்டிருப்பாராயின், நாளடைவில் அவனுடைய தீய செயல்கள் தானே மறைந்தொழியும். நல்ல செயல்களும் தானே வளரும். இதனை (6) “நன்மைதரத்தக்க சொற்களை ஆராய்ந்து இனிமையாகக் கூறினால், தீச்செயல்கள் குறைய நற்செயல்கள் வளரும்.” என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

மக்கள் வாழ்க்கை இன்பவாழ்க்கையாகக் கழிவதற்கும், மக்களுக்கு நன்மையைத் தருவதற்கும் பொருட்டாயிருப்பது இன் சொற்களேயாகும். அவ்வின் சொற்களும், பிறர்க்கு நன்மைபயக்கக் கூடியதாகவும், இனிமையான தன்மை பொருந்தியதாகவும் இருத்தல்வேண்டும்.” இதனை (7) பிறருக்கு நன்மையைக் கொடுத்து இனிமைத்தன்மையினீங்காத இனியசொற்கள். இன்பத்தைத்தந்து, நன்மையைக் கொடுக்கும் என்று திருவள்ளுவர் கூறுவதினால் அறியலாம்.

இவ்வுலகில் வாழும் வாழ்க்கையை இம்மையென்றும், இறந்த பின் அடையும் வாழ்க்கையை மறுமையென்றும் கூறுவதுண்டு. இறந்த பின் அடையும் வாழ்க்கையைப்பற்றிப் பலர் பலவாறு கூறுவார்கள். ஆனால் உண்மையாகக் கண்டறிந்து கூறினவர்கள் ஒருவரும் இல்லை. ஒவ்வொரு பெரியார்களும் தங்கள் தங்கள் மனதிற்றோன்றியவைகளையே எழுதி வைத்துவிட்டுப் போனார்கள். ஆனால் நமது திருவள்ளுவர் மறுமையைப் பற்றி விரிவாக ஒன்றுங் கூறினாரில்லை. “ஓருயிர் இவ்வுலகிற்செய்த நன்மை தீமைகளுக்கேற்ற பலனை இறந்த பின்னும் அடைகின்றது.” என்று மட்டும் தமது திருக்குறளிற் சிற்சில விடங்களிற் கூறுகின்றார். இக்கொள்கை கடவுள் உண்டு என்று சொல்லுகின்ற எல்லா மதத்தினராலும் சொல்லக்கூடிய பொதுக்கொள்கையாகும். ஆகவேஇருக்கும்போதும், இறந்த பிறகும் நன்மை தரத்தக்க செயல்களை, மக்களாய்ப் பிறந்தவர்கள் செய்யவேண்டும். பிறர்க்குத் துன்பந்தராத இன் சொற்கள், இருக்கும்போதும், இறந்த பிறகும் இன்பத்தைத் தருவதாகும். இதனை (8) “பிறர்க்குத் துன்பந்தராத இனிய சொற்கள், இம்மையின்பத்தையும், மறுமை யின்பத்தையும் தரும்.” என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

இன்சொல் பிறர்க்கு நன்மை தருவதோடு, அதனைக் கூறுவோர்க்கும் நன்மை தருகின்றது. கடுஞ்சொல் பிறர்க்குத் துன்பமளிப்பதோடு, அதனைக் கூறுவோர்க்குந் துன்பம் தருகின்றது. இது கண் கூடாகக் கண்டறிந்தஉண்மை. நமது உயிர் நண்பர்களிடமும் நாம் எப்பொழுதும் வன் சொற்களையே கூறத்தொடங்கினால் நாளடைவில் அவர்களும் நம்மிடம் மாறுபட்டுப் பகைஞராகித் தீமை செய்யத் தொடங்குவார்கள். நமது பழம் பகைஞர்களாயினும், அவர்களிடம் இனிய மொழிகளையே புகலுவோமாயின், அவர்களும் நாளடைவில் நம்மீது கொண்டிருக்கும் பகைமைத்தன்மை மாறி, நட்பினராகி நன்மை செய்வதைக் காணலாம். இதனை (9) “இனிய சொற்கள் நன்மைதருவதைக் கண் கூடாகக் காணுகின்றபோது, கடுஞ்சொற்களைக் கூறுவது என்ன பயன் கருதி?” என்று திருவள்ளுவர் ஒரு கேள்வியினால் உணர்த்துவதைக் கொண்டறியலாம்.

ஒரு தோட்டத்திற் சென்றவர்கள், அங்குள்ள மா, பலா, வாழை, கொய்யா, மாதுளை, நெல்லி முதலிய கனி வகைகளைப் பறித்துண்பது இயற்கை. இவைகளை யுண்பதினால் இன்பமும், மகிழ்ச்சியும் அடைவர். அஃதின்றி, எட்டிக்காய், வேப்பங்காய் முதலிய காய்களைப் பறித்துண்ணுவார்களாயின் அவர்களை யாரேனும் தெளிந்த அறிவுடையவர்களென்று கூறுவார்களா? பித்தந்தலைக்கேறிய பேதையர்களென்றன்றோ கூறுவார்கள். அது போலவே, இன்பத்தையளிக்கின்ற இனிய சொற்கள், எளிதாக அமைந்திருக்கவும், அவற்றைக்கூறாமல், வன் சொற்களைக் கூறுகின்றவர்களும் பிறரால் இகழப்படுவார்கள். இதனை (10) “இனியசொற்களிருக்கவும், அவற்றைக்கூறாமல், கடுமையானசொற்களைக் கூறுதல், உண்ணுவதற்குரிய பழங்களிருக்க, அவற்றை யுண்ணாமல், துன்பந்தரத்தக்க காய்களைப் பறித்துண்பதற்கு ஒப்பாகும்.” என்று திருவள்ளுவர் கூறுகின்றதனாலறியலாம்.

இது காறுங் கூறியவற்றால், யாவரும் பிறர்க்கு நன்மைதரக்க இனிய வார்த்தைகளையே கூறவேண்டுமென்றும், உள்ளத்தில் ஒன்றும், வெளியிலொன்றும் கூறும் இனிய வார்த்தைகள் இன் சொறகள் அல்லவென்றும், உள்ளும் புறம்பும் ஒத்துக்கூறும் இன் சொற்களே இன் சொற்களா

# இதிகாசங்கள்.

திரு சந்திரசேகரப் பாவலர் எழுதுவது.

5-ம் பாகம்

## இராமாயணம்—பாலகாண்டம்.

விசுவாமித்திர முனிவனும் அரசகுமாரரும் வழிநடந்து கங்கைக்கரையை யடைந்து அங்கிருந்த முனிவர்களால் நல்வரவேற்கப்பெற்று அவர்களோடு ஓரிரவைக் கழித்து, தோணியேறி ஆற்றைக்கடந்து தென்கரையைச் சேர்ந்து மெல்ல மெல்ல நடந்து போனார்கள். அங்கே மனித வாழ்வற்ற ஓர் கொடிய காடு குறுக்கிட்டது. அது கண்டு இராமன் அக்காடு ஏன் அவ்வாறிருந்ததென முனிவனைக் கேட்டான். அதற்கு மறுமொழியாக விசுவாமித்திரன் "விருத்திராசுரனைக் கொன்றதால் இந்திரனுக்கு நேர்ந்த பெரும் பழியை இவ்விடம் நீக்கியதால் மிகவும் செழிப்பான நாடாக இருந்தது. தாடகை என்னும் இயக்கப்பெண் இவ்விடத்தில் வந்து இங்கு வாழ்பவர்களையெல்லாம் துன்புறுத்துகிறாள். அதனாலேயே இவ்விடம் இவ்வாறு பாழாயிற்று. அவள் இங்கே தான் வாழ்கின்றாள். அவள் புத்திமானான சுந்தனுக்கு மனைவியானாள். அவள் நினைத்தபடியே ரூபங்கொள்ள வல்லவளும் ஆயிரயானை பலமுள்ளவளுமாய்ப் பிறந்தாள். அவளுக்கு மாரீசன் என்னும் இராக்கதப்பிள்ளை பிறந்தான். மாரீசன் இந்திரனை நிகர்த்த வலியுள்ளவன். அவனும் மனிதர்களைத் துன்பப்படுத்துகிறான்" என்று கூறினன். தாடகையின் வரலாற்றை விபரமாகக் கூறும்படி இராமன் கேட்க மறுபடியும் முனிவன் "சுகேது என்ற பெயரையுடைய ஒரு பெரிய இயக்கன் இருந்தான். அவன் நல்லொழுக்கமுள்ளவன், அவனுக்கு குழந்தையில்லாமல் பெருந்தவம் புரிந்து நான்முகனுடைய வரத்தால் இப்பெண் தாடகை பிறந்தனள். அவளைச் சுந்தனென்பவன் மணந்தான். அவர்களுக்கு மாரீசன் பிறந்தான். சுந்தன் அகத்திய முனிவரால் சபிக்கப்பெற்றிறந்தான், அவரைக் கொல்வதற்காகத் தாடகை மாரீசனை யழைத்துக் கொண்டு வந்தாள். அவள் ஓடி வருவது கண்டு அகத்தியர் மிகச்சினந்து அவள் மனிதனைத் தின்பவளாய் விகார ரூபமுடையவளாய் இந்த உரு ஒழிந்து கோரமான உரு உடையவளாக வேண்டும் என்று வெவ்வுரை கூறினர். உடனே அவள் அவ்வாறே ஆகி இந்த காட்டைப் பாழ் செய்கின்றாள். இயக்கர்களுக்கு இயல்பில் பலமில்லையானாலும் வரத்தால் பலம் பெற்ற இக்கொடியவளாகிய தாடகையை நீயே கொல்லவேண்டும், பெண்ணைக் கொல்ல வேண்டுமென்று நீ அருவருப்புக் கொள்ள வேண்டாம். முன்பொருக்கால் விரோசனனென்பவனுடைய மகளாகிய மந்தரை கெட்டவளாயிருந்ததால் அவளை இந்திரன் கொன்றான், மற்றொரு காலத்தில் பிருகுவுக்கு மனைவியும் சுக்கிரனுக்குத் தாயுமான ஒரு பெண்ணை அவள் உலகில் இந்திரனை இல்லாமற் செய்துவிட வேண்டுமென்று எண்ணினதால் திருமாலே கொன்றார். இப்படியே நல்லோரநேகர் தீநெறி யொழுகும் பெண்களைக் கொன்றிருக்கின்றனர் ஆகலின் நீ இவளைக் கட்டாயங் கொன்று விட வேண்டும்" என்று கூறினர், இராமனும் அக்கொலையைச் செய்யவுடம்பட்டனன் உடனே அவன் வில்லில் நாணேற்றி ஆரவாரஞ் செய்தனன். அவ்வாரவாரத்தைக் கேட்ட தாடகை அங்கே வந்தனள். இராமன் தம்பியைப் பார்த்து "இலக்குவ! இவளைப் பார்த்தாயா. இவளைக்கண்டு அஞ்சா நெஞ்சினரும் கலங்குவர் வெல்ல முடியாதவளாயுள்ள இவளை இப்போது காதையும் நுனி மூக்கையும் அறுத்துத் துரத்தி விடுகிறேன் பார். இவள் பெண்ணாயிருந்ததால் இவளைக்கொல்ல எனக்கு மனம் வரவில்லை ஆதலால் இவளைக் கைகால்களை முறித்து பலமில்லாமற் செய்ய நினைக்கிறேன்" என்றனன். தாடகை கல்லெறிந்து சண்டை செய்தாள். இராமன் அவள் கைகளை அறுத்துத்தள்ளினன். அப்போது இலக்குவன் அவளது காதுகளையும் மூக்கு நுனியையும் அறுத்து விட்டனன். பின் இராமன் ஓர் அம்பெய்து அவளைக்கொன்றனன். (இவ்வரலாறு வால்மீகி—பாலகாண்டம் இருபத்தாறும் சருக்கத்திலுள்ளது).

அன்றிரவு அவர்கள் அங்கே தங்கி மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு விசுவாமித்திரனுடைய ஆச்சிரமத்தை அடைந்தனர். அங்கே போனவுடன் இராமன் அவ்வாசிரம வரலாற்றை வினவ விசுவாமித்திரன் கூறுகிறான். "திருமால் இவ்விடத்தில் தவம் செய்து கொண்டிருந்தனர். அப்போது விரோசனனுடைய மகன் பலி என்னும் அரசன் இந்திரனை வென்று மூவுலகங்களும் போற்ற ஆண்டனன். அச்சக்கிரவர்த்தி ஒரு பெரிய யாகம் செய்யத்தொடங்கினன். தன்னிடம் வந்து யாசிக்கிறவர்களுக்கெல்லாம் அவரவர்கள் கேட்டது கேட்டபடி கொடுத்தான். இச்செய்தியை தேவர்களோடு இந்திரன் திருமாலிடம் கூறி மகாபலியைக் கொல்லவேண்டினன். திருமால் அதற்கிசைந்து தாம் பிறக்கும்படி தம்மிடம் வரம் பெற்றிருந்த காசியப முனிவனுக்கும் அதிதிக்கும் பிள்ளையாகப் பிறந்து குள்ள உருவத்தோடு பலியிடம் சென்று மானத்தை விட்டு மூவடியிரந்து பெற்றுக்கொண்டு பலிச்சக்கிரவர்த்தியை யடக்கினர். அவ்வாமனர் தங்கிய ஆச்சிரமம் இது. இதில் நான் வாழ்கிறே"னென்றனன். (இவ்வரலாறு வால்மீகி பாலகாண்டம் இருபத்தொன்பதாவது சருக்கத்திலுள்ளது).

கோசிக முனி யாகம் தொடங்கினன். ஐந்து நாட்கள் சென்றன. ஆறும் நாள் சுபாகுவும் மாரீசனும் யாகத்தைக் கெடுக்க வந்தனர். அவர்களில் மாரீசனை ஓர் கணையால் கடலிலே தள்ளும்படி செய்தான் இராமன். மற்றொரு கணையால் சுபாகுவை மாண்டனன். யாகம் இனிது நிறைவேறிற்று. பின் முனிவன் இராம இலக்குவரை யழைத்துக்கொண்டு மிதிலையை நோக்கி நடந்தனன்.

மேலே காணப்படும் வரலாற்றைச் சிறிது ஆராய்வோம். தாடகை ஓர் பெண். இவளுடைய மகனே மாரீசன். அவன் இராவணனுக்கு மாமன் முறை. இராவணன் பிறந்து வரம்பெற்று இலங்கையில் அரசாளத் தொடங்கிய போது கிழவனாகிய மாரீசன் அவனை அடைந்து அவனுடைய ஆதரவைப் பெற்று முனிவர்கள் செய்த யாகங்களை சுபாகு எனபவனோடு கூடி அழித்து வந்தான், ஆதலின் இராவணன் வயதளவாவது அவனுக்கு ஆகியிருக்கவேண்டும். இராவணன்முககோடி ஆண்டுவாழ்நாள்வரம் பெற்றவன். அவன் காடகையிறந்த பதினான்காவது ஆண்டில் இறக்கிறானெனத் தெரிவதால் அப்போது இராவணன் பிறந்து கிட்டத்தட்ட மூன்று கோடி ஆண்டுகள் ஆயின, ஆதலின் மாரீசனுக்கும் அப்போது மூன்றுகோடி ஆண்டுகளுக்கு அதிகமாகவே ஆயிருக்க வேண்டும். அவனுடைய தாயாகிய தாடகையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இராவணன் தான் பெற்ற வரத்தின் மகிமையால் அவ்வளவு காலம் வாழ்ந்து வந்தனன். மாரீசன் யாரிடம் இவ்வளவு காலம் வாழ வரம் பெற்றானோ தெரியவில்லை. இதற்கும் மேலாக அவன் தாய் தாடகை யாரிடம் நீண்ட வாழ் நாள் பெற்றனளோ? மாரீசனும் தாடகையும் இவ்வளவு காலம் வாழ வரம்பெற்ற வரலாறொன்றும் காணப்படவில்லை. ஆதலின் இவர்களுடைய இவ்வாழ்க்கையும் அழிவும் அறிவுக்கு உடன்படுமாறில்லை. இருந்தாலும் இவை பலவர்களால் எழுதிவைக்கப்பெற்றுள்ளன. இதன் காரணத்தைப் பின்னர் ஆராய்வோம்.

தாடகையின் தந்தையாகிய சுகேது மிகவும் நல்லவன் என்று வால்மீகி முனிவர் கூறுகிறார் கம்பரும் அவ்வாறே "சுகேதுவென்றுளனோர் தூய்மையான்" என்று கூறுகிறார். இவன தவங்கிடந்து பெற்ற பெண்ணே தடாகை. இவளை புத்திமானான சுந்தனுக்கு வாழ்க்கைத்துணைவியாக சுகேது தருகிறான். சுந்தன் ஒரு இயக்கத் தலைவன். இயக்கர்கள் பொதுவாக பலமற்றவர்கள். சுந்தனைச் சிறந்த அறிவாளியென வால்மீகி கூறுகிறார். இவன் அகத்திய முனிவர் சாபத்தால் இறக்கிறானென்பதால் அவருடைய சாபம்பெறுவதற்கு அவருக்கு அவன் பெருந் தீங்கு செய்திருக்க வேண்டும். ஆனால் வால்மீகி அதுபற்றி ஒன்றும் கூறுகின்றிலர். அவர் சபித்தார் இவன் இறந்தான் என்று மட்டுமே கூறுகிறார்.

சுந்தன் சிறந்த புத்திமானானதால் முனிவர் சாபத்தைப் பெறுமாறு அவருக்கு அவனென்ன கெடுதியைச் செய்திருக்கக்கூடும்? மேலும் அவனோ இயற்கையில் பலமில்லாதவன். நல்லொழுக்கமுடையவனாகிய சுகேதுவின் மாப்பிள்ளை. கம்பரோ சுந்தனுடைய குணத்தை மாற்றி அவனைக் "காய்சினத்த

இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

---

குமென்றும், இன் சொற்களே ஒருவர்க்கு அழகு செய்வன வென்றும், அவை இம்மை மின்பங்களையும், அளிக்குமென்றும் இன் சொற்களே உலக சகோதரத்துவத்தை வளர்ப்பதாகுமென்றும், இவைகளே திருவள்ளுவர் கொள்கை யென்றும் அறிகின்றோம்.

# பழையன கழிதலும் புதியன புகுதலும்.

'நவசக்தியில்'

திருவாளர் வல்லை பாலசுப்பிரமணியன் B. A. அவர்கள் எழுதுவது

ஒரு புகைவண்டித்தொடர் அதற்கென்று முன்னமேயே செப்பனிட்டு அமைக்கப்பட்ட இருப்புப்பாதையன்றி வேறு வழியே செல்லக் கூடாதது போன்று நாமும், நமக்கென்று நம்முன்னோரால் செப்பனிட்டமைக்கப்பெற்ற நெறி பற்றித் தான் செல்ல வேண்டுமாம். புகைவண்டிகள் அவ்விருப்புப்பாதையினின்றும் ஒரு சிறிது வழுக்கினும் சாய்ந்து வீழ்ந்தழிவது போன்ற, நாமும் அப்பண்டை நெறியினின்றும் அணுவேனும் விலகினால், அழிந்தொழிவோமென்று எம் பெரியோர்கள் அச்சுறுத்துகிறார்கள். நாம் சொல்லும் ஒவ்வொரு செய்கைக்கும் பண்டை நூற்களில் பிரமாணமிருக்கின்றதா என்று முதலில் பார்த்தல் வேண்டுமாம். அங்ஙனமில்லையேல் நாம் சொல்லுவதாதல் செய்வதாதல் கூடாதாம். இதுபோன்ற குருட்டு வழக்கங்கள் இதுபோழ்து நம்மிடை நின்று நிலவி, எண்ணிறந்த இன்னல்களை நமக்கிழைக்கின்றன, முதற்கண். எடுத்துக்காட்டாக, நாம் இஞ்ஞான்று மக்களிடை சாதி வேற்றுமை கூடாது என்று வாதிக்கிறோம். நமது சொந்த அறிவிற்கும் (Common sense) அஃதே சரியென்று தோன்றிற்று. அஃதுடனின்று, அதற்கு வேண்டிய காரியங்களை நடைமுறையில் நிகழ்த்தினால் சாலுமன்றோ? ஆனால், நமக்கிருக்கும் பேராவலினால் வேதங்களிலும் உபநிடதங்களிலுங்கூட சாதிவேற்றுமையில்லையென்று பல சான்றுகளால் நிறுவிக்காட்ட முயல்கின்றோம். ஆனால் சாதி வேற்றுமை வேண்டுமென்று வாதிப்போர் அதே வேதம், உபநிடதம் புராணம், பகவத்கீதை முதலானவைகளால் தமக்குச் சாதகமானவற்றைப் பொறுக்கியும், நாம் எடுத்துக்காட்டிய சான்றுகட்கே திரிபுப் பொருள் கொண்டும் தம்மதத்தை நிறுவுகின்றனர். இனி இதற்கு முடிபெங்கே என்று தான் யாம் கடாவுகின்றோம். அதிலும் வடமொழி நூற்களில் இத்தகைய நூற்புரட்டுகட்கு அளவேயில்லை. ஒரு சொற்றொடருக்கே தம்முள்ளொன்றோடொன்று முற்றும் முரண்பாடான வெவ்வேறு பொருள்களைக் கொள்வதற்கு, அவ்வடமொழி இலக்கணம் இசைவாயிருக்கிறது. இதுபற்றியன்றோ ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும் தமது மனோன்மணீயத் தமிழ் தெய்வ வணக்கத்தில்,

"பத்துப் பாட்டாதி மனம்பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட் கிசையும் இலக்கணமில்
கற்பனையே"

என்று தமிழ் வடமொழி நூற்களின் திறத்தினை நன்கெடுத்துக் காட்டினார்.

இதுபோன்றே பல்லாவரம் உயர் திரு சுவாமி வேதாசலம் அவர்கள் தமது அருமைத் திருவாசக விரிவுரையில் இருக்குமுதலான நான்கு வேதங்களும் மக்கள் வாய்ப்பட்டனவே யன்றி, கடவுள் திருவாய் மலர்ந்தருளியன வல்லவென்று மிகச் சாதாரண அறிவிற்கும் படும்படி, அவ்வேதங்களினின்றுமே பற்பல சான்றுகளைக்கொண்டு நிறுவிக்காட்டினான், ஆ! இதற்குத் தென்னாட்டு வைதிகச் சைவர்களிடமிருந்து எத்துணை, எத்துணை மறுப்புகளும், வசைமொழிகளும் பிறந்தன? கடவுள் வேதங்களைப் பாடினார் என்று இது காறும் தமிழ்மொழியில் வந்துள்ள பிரயோகங்களையெல்லாம் அப்படியே அணியணியாக எடுத்து, பக்கம் பக்கங்களாக அச்சடித்து விளம்பரப் படுத்தினார்கள். திருஞான சம்பந்தர் முதலிய பெரியோர்கள் பாடியவையெல்லாம் "பொய்யா?" என்றுங்கேட்டார்கள். 'பிராமணங்கள் ஒரு பக்கமிருக்கட்டும், உமது சொந்த அறிவிற்கு யாங்ஙனம் தோன்றுகிறது" என்று விடையிறுப்பது தவிர வேறென்ன சொல்வது? திருஞான சம்பந்தர் முதலிய பெரியோர் அக்காலத்துப் பெருவழக்காயிருந்தவைகளை யங்ஙனே தம்பாக்களுள் பெய்துரைத்தார்கள் என்று ஏன் கொள்ளுதல் கூடாது? அப்படி யாங் கூற முன்வந்தால் திருஞானசம்பந்தர் முதலிய பெரியோர்களைப் பொய்யர்களாக்கிய பாவிகளாம் யாம். அங்காத்தவில்லா எரிவாய் அளறு எம்மை விழுங்குதற்குக் காத்திருக்கின்றதாம், இருக்கட்டும்.

இந்திய நாடு இத்தகைய சீர்கேடான நிலையையெய்திருக்கையில் ஒருவர் இருவர் அங்கும் இங்கும் சீர்திருத்த முழக்கஞ் செய்தால், "ஆ, நம் மதத்திற்கு வந்தது ஆபத்து" என்று கூக்குரலிட்டுச் சிலர் புற்றினின்றும் ஈசல் போற் கிளம்பி விடுகின்றனர். நாம், இக்கட்டுரையின் முதலிற் கூறியபடி, கல்வி மெதுவாகப் பரவவேண்டுமாம், அப்படியானால் மக்கள் தாமாகவே சீர்திருந்தி விடுவார்களாம். இதைச் சரியென்றே ஒப்புக் கொள்வோம் இனி எத்தகைய கல்வி நம் மாணவர்கட்கு அளிக்கப்படுகின்ற தென்பதைச் சிறிது ஆராய்வாம்.

நம் நாட்டில் இப்போது எங்கணும் தேசீய முழக்கஞ் செய்யப்படுகின்றது. அதனோடே தேசீயக் கல்வி தாய் மொழிப்பற்று, சுதேச ஆடை, தாய் நாட்டு மருத்துவம், தாய் நாட்டு இசை முதலிய இன்னோரன்ன பிற ஆதரவு பெற்று வருகின்றன. இவையெல்லாம் மகிழ்ச்சி நனி தரத்தக்கன. ஆனால், சமயத்தின் பேராலும் கடவுள்பேராலும் பற்பல வஞ்சக வாழ்வுகள் நடந்தேறியது போன்று, தேசீயக் கல்வியின் பேரால் சில சுயநலக்காரர்கள் மக்கள் வேண்டாது ஒழித்து விட்ட பண்டைய வழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் மீண்டும் புதுப்பித்து நாட்டினை அறியாமைச் சேற்றில் அழுத்துவது நாட்டின் விடுதலை நாடி உழைக்கும் உண்மைத் தொண்டர்களை ஆற்றொணாத் துயருக்குட்படுத்துகின்றது: சில ஆண்டுகட்கு முன்பு குடந்தைக்கருகில் உள்ள திருபுவனத்தில் நடந்தேறிய பௌண்டரீக யாகம் தேசீயத்திற்கறிகுறியாம். இராமாயணம் மகாபாரதக்கதைகள் இஞ்ஞான்று கல்லூரிகளில் படிக்கும் சிறார்களுக்கு முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் ஆங்கிலத்திலும் தாய்மொழிகளிலும் கற்பிப்பது பெரு வழக்கமாய் விட்டது. இவைகளைக் கற்கக்கூடாதென்பது எமது கருத்தன்று. நமது பண்டைய புராணங்களும், இதிகாசங்களும் யாவை, அவை என் சொல்லுகின்றன எனத் தெரிந்து கொள்ளுதல் இந்தியராகப் பிறந்த ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமையாக இருப்பினும் சில வாண்டுகள் கழிந்தபிறகு அவ்விதிகாசங்கள் போதிப்பனவற்றுள் கொள்ளத்தக்கன யாவை, தள்ளத் தக்கன யாவை என்று நஞ்சிறார்கள் உடனே அறியும்படி செய்தல் வேண்டும். ஆனால் நம் மாணவர்களுக்கு இக்கதைகளெல்லாம் உண்மையாய் நடந்தன வென்று தோன்றும் படியும் அவற்றிற் கூறப்பட்ட ஒழுக்கங்கள் அவ்வாறே கைப்பற்றுதற் குரியன என்றும் பண்டைப் பெருமையில் தோய்ந்தெழுந்த ஆசிரியன்மார்கள் மாணவர்கட்குக் கற்பிப்பார்களானால் நம் நாடு ஈடேறுவ தெஞ்ஞான்று? இக்கல்வி பூத்தலினும் பூவாதிருப்பின் நலமன்றோ? எடுத்துக்காட்டுகளாக பானைச்சோற்றுக்கு ஒன்று பதம் பார்த்தால் போல ஒரு சிலவற்றைக் கீழே தருகின்றோம்.

சிறு மாணவர்கட்குப் பாடமாக அமைந்த நீதிக்கதை புத்தகமொன்றில், 'சக்கர நெறிநில்', என்னும் ஆத்திச்சூடித் தலைப்பின் கீழ் இராமாயண உத்தர காண்டத்தில் சூத்திரன் ஒருவன் தவஞ் செய்தானென்று இராமபிரான் அவனைக் கொன்றுவிட ஆணை தந்ததும், அவன் இறந்த பிறகு அவனால் உயிர் நீத்த ஒரு பார்ப்பனனின் மகவு மீண்டும் உயிர் பெற்றெழுந்ததென்னும் ஒரு கதையும், ஆகவே மன்னன் ஆணை வழிக் குடிகள் நிற்கவேண்டுமென்றும் அன்றேல் தவஞ் செய்த சூத்திரன் பட்ட பாடாய் முடியுமென்றும் நீதியும் பொறிக்கப்பட்டிருக்கின்றது. இஃது உண்மையாய் நடந்திருப்பினும் இருக்க, அன்றிப் பொய்யேனும் ஆகுக. அக்காலத்தில் இத்தகைய வழக்கங்கள் நலன் தந்திருப்பினும் இருக்கலாம். இக்காலத்தில் அதுவும், "சக்கர நெறி நில்" என்னும் தலைப்பின் கீழ் இக்கதை மிகவும் தீங்கு பயக்கும், 'கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டின், கடும் புலி வாழும் காடு நன்றே" என்னுந் தலைப்பின்கீழ் இக்கதை பொறிக்கப்பட்டிருக்குமாயின் மிக்க சால்புடைத்தாயிருப்பது மன்றி உண்மையாகவே ஒரு நீதியினையும் போதித்திருக்கும். இது தேசீயக் கல்வியாம். இதைக் கற்கும் மாணவர்கள் நன்மை தீமை யறியாது சொன்னதைக் கேட்டுக் கொள்ளும் கிளிப்பிள்ளைகள் போன்றவர்கள். இளமையில் இக்கதை நன்றாய்ப் பதிந்து விட்ட மனோ தத்துவமுடைய இம்மாணவர்கள், நாளை பெரியவர்களானால் இவர்களால் நாட்டுக்கு உதவிபயக்குமோ என்று நாம் கடாவுகின்றோம். இக்கதையைப் படித்த பார்ப்பனச் சிறுவன், தான் இதுகாறும் உயிர்த் தோழன் என்று உறவாடி வந்த நண்பனை இன்று முதல் 'சூத்திரப் பயல்' என்று கீழ் நோக்கிப் பார்க்கின்றான். ஆசிரியன்மார்களே கண்கண்ட தெய்வம் என்றும் அச்சடிக்கப்பட்டனவெல்லாம் எப்போதும் நிலைபேறுடைய உண்மைகளென்றும் நம்பும் அவ்விளமைப் பருவத்தில் மற்றொரு சிறுவனும், தான் உண்மையாகவே சூத்திரனென்றும் ஆகையினால் தாழ்ந்தவனென்றும் பார்ப்பனன் உயர்ந்தவனென்றும் கருதுகிறான், பார்ப்பனச் சிறுவன் பிஞ்சிலே பழுத்து விடுகிறான். இது தேசீயக் கல்வியாம். சமய போதனையாம் (Religious instruction)

மற்றொரு பாட புத்தகத்தில் 'பொய் பேசாதே' என்னுந் தலைப்பின் கீழ்ப் பாரதத்தில் கன்னன் பரசுராமரிடம் வில்வித்தை கற்ற கதை எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. கன்னன் தானும் வில் வித்தை கற்க விழைந்து பரசுராமரிடம் சென்றதாகவும் உலகத்தைப் புரக்கும் மன்னர்களின் இருபத்தொரு தலைமுறைகளைப் பூண்டோடு வேரறுத்த 'பெருமை' வினையுடைய பிராமணராகிய—ஆ! எத்துணைப் பிராமணர்—பரசுராமர் பிராம்மண குலத்துக்கன்றி மன்னர் குலத்திற்குத் தாம் ஆயுதப் பயிற்சி கற்பிப்பதில்லையென்று மறுத்துவிட கன்னன் தான் பிராமணனென்றே பொய்கூறி வில்வித்தை கற்றுத் தேர்ச்சியுற்றதாகவும், இஃதிங்ஙனமாக ஒருபகல் பரசுராமர் கன்னன் துடையின் மேல் தலை சாய்த்துப் படுத்துறங்கியதாகவும், அஞ்ஞான்று ஒரு வண்டு கன்னனது துடையைக் குருதி பெருகத் துளைத்துக்கொண்டு ஊடுருவிச் சென்றதாகவும், தான் பரசுராமரிடம் வைத்த அன்பு மீக்கூர்தலினால் அவர் தம் இன்றுயிலைக் கலைக்க இசையாது வண்டு துளைப்பதைப் பொறுத்துக்கொண்டு கன்னன் தன் துடையை ஓர் அணுவளவேனும் அசைக்காமல் இருந்ததாகவும், இறுதியில் குருதி வெள்ளம் பெருக்கெடுத்துப் பரசுராமரின் தலையை நனைக்க அவர் விழித்துக் கன்னன் துடை இருக்கும் அலங்கோலத்தைப் பார்த்து வெகுண்டு

இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

# சனாதன மதக் கடவுளின் ஆட்சி.

திரு. குமாரசாமி எழுதுவது.

இடம்:—பரலோகம் கடவுள் தர்பார்.

பாத்திரங்கள்:— கடவுள், சித்ரபுத்ரன், யமன், ஞானசாகரன், பக்தரத்தினம்.

காலம்:—ஊழிகாலம்.

I

கடவுள்:—அடே! சித்திரபுத்திரா! என்னதாமதம், இன்றைய கணக்கென்ன?

சித்ரபுத்ரன்:—சர்வலோகப் பிரபு! சர்வ ஞானப் பிரபு! சர்வவல்லபா! கருணாநிதி! நாயேன் தங்கள் ஆக்ஞையையே எதிர்பார்த்திருந்தேன். (யமனைப்பார்த்து சமிக்கை செய்கிறான்)

யமன்:—(மானிடர் இருவரை அழைத்து வந்து தர்பார் முன்னிலையில் நிறுத்தி) "சுவாமி உத்திரவுப்படி நடந்து கொண்டேன்" என்று ஒதுங்கி குனிந்து வாய் பொத்தி கைகட்டி நிற்கிறான்.

சித்ரபுத்ரன்:—(கடவுளை நோக்கி) இன்றைய கணக்குப்படி இவ்விருமானிடர்களும் விசாரிக்கப்படவேண்டியவர்கள்.

கடவுள்:—சரி. விசாரி.

சித்ரபுத்ரன்:—(ஞானசாகரனை நோக்கி) இப்படி வா, உன் நாமதேயமென்ன?

ஞானசாகரன்;—என் நாமமும் தேயமும் தங்கள் கணக்கிலிருக்குமே.

சித்ரபுத்ரன்:—சீ! கேட்ட கேள்விக்கு பதிலிறு. இது பூலோக கோர்ட்டல்ல என்பதை ஞாபகத்தில் வை.

ஞானசாகரன்:—இது பூலோக கோர்ட்டாயிருந்தால் என் நாமதேயத்தை நான் சொல்லித்தான் தீரவேண்டும். ஆனால் தங்கள் சமூகத்துக்கு முற்காலம் தற்காலம் பிற்காலம் எல்லாம் தெரிந்திருக்குமென்று நினைத்தேன்.

சித்ரபுத்ரன்:—சீ! அதிகப்பிரசங்கி! வாயை மூடு. கேட்ட கேள்விக்கு பதில் சொல். இல்லாவிட்டால் பார் அங்கே (யமனைச் சுட்டிக்காண்பிக்கிறார். யமன் உதட்டை மடக்கி நாக்கைக் கடித்துக்கொண்டு கதாயுதத்தை எடுத்துச் சுழற்றிக்காட்டி ஞானசாகரனைப் பயமுறுத்துகிறான்).

சித்ரபுத்ரன் (மறுபடியும்):— உன் நாமமென்ன?

ஞானசாகரன்:—என் பெயர் ஞானசாகரன்.

சித்ரபுத்ரன்:—எந்தத்தேசம்.

ஞானசாகரன்:— ஆப்கானிஸ்தானத்திற்கும் பெலூஜிஸ்தானத்திற்கும் மேற்கே யுள்ள இந்துஸ்தானத்திற்கு தெற்கேயிருக்கும் ஆராய்ச்சிஸ்தானம் என் தேயம்.

சித்ரபுத்ரன்:—உன் ஊர் எது?

ஞான:—ஞானபுரி.

சித்ர:—உன் மதம் என்ன?

ஞான:—சுயமரியாதை.

சித்ர:—அதன் கொள்கைகளென்ன?

ஞான:—எவனும் தன்னை மற்றவனைவிட பிறவியில் தாழ்ந்தவனென்றோ, உயர்ந்தவனென்றோ மதிக்ககூடாது. தன்னைத் தாழ்ந்தவன் என்று நினைத்தல் தன்னைத்தானே இழிவு படுத்திக்கொள்வதாகும். மற்றவனைவிட தன்னை உயர்ந்தவன் என்று நினைத்தல் பிறரை இழிவு படுத்துவதாகும். அதாவது சமத்வம், சகோதரத்வம், சுதந்தரம் வளர்த்தல், உண்மை விளக்கல், அனைத்துயிர் ஒன்றென்றெண்ணல், அரும்பசி யெவர்க்கும் ஆற்றல், மனத்துள்ளே பேதாபேதம் வஞ்சம் பொய் சூது சினம் ஆகிய வற்றை தவிர்த்தல்.

சித்ர:—உன் மதத்தின் கடைசி லக்ஷ்யம் யாது?

ஞான:—எந்த ஜீவனுக்கும் யாதொரு கெடுதியும் செய்யக்கூடாது. எல்லா ஜீவன்களுக்கும் உதவி செய்யவேண்டும்.

கடவுள்:—அப்படியா சமாச்சாரம் (ஞானசாகரனை மேலும் கீழும் பார்த்து) இருக்கட்டும் உன் கால க்ஷேபம் எப்படி?

ஞான:—உடலைக்கொண்டு மனதார உழைத்து நல்வழியில் சம்பாதிப்பது. அதனை நானும் என் குடும்பத்தாரும் சந்தோஷமாய் உண்டு ஆனந்தமாய் இருப்பது.

கடவுள்:—உன் வாழ்க்கைக் கடனை யெல்லாம் கிரமப்படி நடத்தி வந்திருக்கிறாயா?

ஞான:— என் வாழ்க்கையில நான் கடன் படவில்லை.

கடவுள்:—எப்போதாவது திருடினதுண்டா? பொய் சொன்னதுண்டா? பொய்க் கையெழுத்திட்டதுண்டா?

ஞான:— இல்லை! இல்லை!! இல்லவே இல்லை !!!

கடவுள்:—சிரார்த்தம் முதலிய சடங்குகளையும் வருணாசிரம தர்மங்களையும் அநுசரித்து வந்தாயா?

ஞான:—அதைப்பற்றி நான் ஒரு சிறிதும் கவலை கொண்டதேயில்லை.

கடவுள்:—அப்படியா! நீ அவைகளை கிரமமாய்ச் செய்யவில்லையா?

ஞான:—ஒரு நாளாவது அதைப்பற்றி நினைத்ததேயில்லை.

கடவுள்:—எம்மிடத்திலாவது சரியாய் பக்தி செலுத்தி அபிஷேகம், பூஜை, உற்சவம், கலைவகையாக்களைச் சரியாய்ச் செய்து வந்தாயா?

ஞான:—அதுவும் இல்லை. உங்களைப் பற்றி எண்ணவே எனக்கு நேரமில்லை. கஷ்டப்படவும் சம்பாதிக்கவும் அவைகளை ஏழைகளுக்கு உதவவும் மீதி நேரங்களில் மற்ற ஜீவன்களுக்கு உழைக்கவுமே சரியாய் இருந்தது என் வாழ் நாள்.

கடவுள்:—அப்படிப்பட்டவனா நீ! சடங்கு செய்யவில்லை! வருணாசிரம தர்மப்படி நடக்கவில்லை! எமக்கும் பக்தி பூசை முதலியவை செய்யவில்லை! சண்டாளனாகி விட்டாய்! எமதர்ம! இவனை மீளாநரகில் தள்ளு.

II

கடவுள் (மற்றொருவனைப் பார்த்து) ஹே! நரனே! உன் பேரென்ன;

நரன்:—பக்தரத்னம்.

கடவுள்:—உன் மதமென்ன?

பக்தரத்னம்:—கடவுள் சர்வ வல்லமையுள்ளவர். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதோடு சதா சர்வ காலம் கடவுளை நினைத்துக்கொண்டு அவருக்கு பூஜை உற்சவம் செய்வது.

கடவுள்:—சந்தோஷம்! உன் தொழில் என்ன?

பக்த:—என்ன வேலையாவது செய்து பணம் சம்பாதிப்பது.

கடவுள்:—அப்படி என்னென்ன வேலை செய்தாய்.

பக்த:—நன்றாய்த் திருடினேன், வக்கீல் வேலை செய்தேன், உத்தியோகம் செய்து லஞ்சம்வாங்கினேன், வியாபாரம் செய்துவியாபாரத்தில்ஏமாற்றிக்கொள்ளையடித்தேன்

கடவுள்:—அப்படி எவ்வளவு சம்பாதித்தாய்?

பக்த:—ஒரு லக்ஷ ரூபாய்.

கடவுள்:—பணத்துடன் இன்னும் ஏதாவது சம்பாதித்ததுண்டா?

பக்த:—பக்கத்து வீட்டான் பெண்டாட்டியையும் நான் அடித்துக்கொண்டு வந்து என் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தேன். அதனாலும் எனக்கு வரும்படியுண்டு.

கடவுள்:— உனக்கு சொந்த மனைவி மக்கள் இல்லையா?

பக்தன்— ஆம் உண்டு

கடவுள்—நீ அவர்களைக் கை விட்டுவிட்டால் அவர்களுக்கு யார் துணை?

பக்தன்—அவர்களை நான் கைவிடவில்லை. அவர்களைக்கொண்டு தான் நான் உத்தியோகம் பெற்றது, அவர்களை உபயோகித்துத்தான்பணமும் சம்பாதித்தேன்.

கடவுள்— அந்தப் பணத்தையெல்லாம் என்ன செய்தாய்?

பக்தன்— காசிக்குப்போனேன், கங்கையில் மூழ்கினேன், ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னதானம் செய்தேன், கடவுளுக்குலக்ஷதீபம் ஏற்றி வைத்தேன், பிதுர்க்கள்சடங்கு முதலியவைகள் கிரமமாய்ச் செய்து வந்தேன், என் வருணப்படி நான் உயர்ந்த ஜாதியானாகவே இருந்து வந்தேன், யாரையும் தொடமாட்டேன், கீழ் ஜாதியான் சாவதாயிருந்தாலும் ஒரு முடக்கு தண்ணீர் கொடுத்துப் பாவியாகமாட்டேன், சதா தங்கள் ஞாபகமே.

கடவுள் ஓ! எம்மைத் துதித்தாய்! எம்மை நம்பினாய்! எல்லாம் எமக்கே செய்தாய் மிக்க சந்தோஷம்! முதலையுண்ட பாலனை அழைத்தது, குதிரையைக்கூடி பாயசம் பருகிய கௌசலையின்கர்ப்பத்துக்குள் யாம் புகுந்து குழந்தையாய் (ராமனாய்) பிறந்தது, இறந்துபோன ஜலந்தராசுரன் சவத்துக்குள் புகுந்து அவன் பத்தினியை ஏமாற்றிப் புணர்ந்தது முதலிய எமது திருவிளையாடல்கள் உனக்குத் தெரியாதா?

பக்தன்— ஆம் பிரபு! நன்றாய்த்தெரியும். தங்களிடம் எனது நம்பிக்கையையும் இன்னும் அதிகமான பக்தியையும்காட்ட இவைகளைவிட இன்னும் பெரியபுராணங்கள் இல்லையே யென்று வருத்தமும் பட்டேன்.

கடவுள்— மெச்சினோம்! மெச்சினோம்!! ஹே! சித்ரபுத்ரா இந்தபக்தனை நமது சொர்க்கத்திலேயே இருத்தி இவனுக்கு அப்சரஸ்திரீகளைக்கொண்டு வந்துவிடு சுகமாய் இந்த மோக்ஷத்தை அனுபவித்துக்கொண்டிருக்கட்டும், அவன் ஆசை தீர்ந்த பிறகு மறுபடியும் நானாய்ப்பிறந்து மேற்கண்ட நற்கருமங்களைச் செய்து மறுபடியும் இதுபோல் நம்மை வந்தடையட்டும்.

## 'குடி அரசு' அபிமானிகளுக்கு ஓர் விண்ணப்பம்.

சென்ற இரண்டு நாள் எனது நண்பர்களுடன் இவ்விடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து நமது வைக்கம் வீரரால் நடத்தப்பெறும் "குடி அரசு" பத்திரிகைக்கு சில சந்தாதார்களைச் சேர்த்து அனுப்பியது "குடி அரசு" அபிமானிகள் யாவருமறிந்ததே. இதேபோல் பற்பல இடங்களிலும் அநேக 'குடி அரசு' அபிமானிகள் சந்தாதார்களைச் சேகரித்து அனுப்பியுள்ளார்கள். நமக்கு போதிய ஆதரவளித்து சந்தாதாரர்களைச் சேர்த்து கொடுத்த அன்பர்களுக்கும் 'குடி அரசு' அபிமானிகளுக்கும் என்னுடையவும் எனது நண்பர்களினுடையவும் வந்தனத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் மக்களுக்கு சுயமரியாதை உணவளித்து வருவது ஒப்பற்ற "குடி அரசு" பத்திரிகை என்பது மிகையாகாது. பார்ப்பனரைத்திட்டும் பத்திரிகை என்று சொல்லிய ஒவ்வொருவரும் இதைவிட உண்மையான பத்திரிகை வேறொன்றுமில்லை என்று சொல்ல முன் வந்துள்ளார்கள் என்றால் இதனுடைய பெருமையும் மக்களுக்கு இதனிடத்திலுள்ள அபிமானம் இன்னதென்ற விரிவுரை வேண்டுவதின்று. இப்பத்திரிகை தோன்றி மூன்றாண்டிற்குள் நம் மக்களை எவ்வளவு தூரம் விழிப்படையும்படி செய்திருக்கின்றதென்பதை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அறிந்தே இருக்கின்றார்கள். தற்பொழுது "குடி அரசு" பிரதி வாரமும் 6000 பிரதிகளுக்குமேல் வெளிவருவதுடன் மலாய் நாட்டில் மட்டில் சுமார் 2000 பத்திரிகைகள் உலாவி வருகின்றன. இது சமயம் 'குடி அரசு' ஆசிரியரின் தமையனார் திருவாளர் ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கரவர்கள் மலாய் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து 'சுயமரியாதை' கொள்கையை பரப்பி வருகின்றார்கள். அப்பெரியாருக்கு ஆங்காங்குள்ள 'சுயமரியாதை' தொண்டர்கள் போதிய ஆதரவளித்து வருகின்றது போற்றத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் மலாய் நாட்டில் தமிழ் பத்திரிகைகளின் நிலையை சிறிது பொது மக்களுக்கு அறிவிக்கவேண்டியதாகயிருக்கின்றது. இந்தியர்களால் நடத்தப்பெறும் பத்திரிகைகளை இவ்விடங்களில் பரப்புவதற்காக முதலில் 'தமிழ் நாடு' ஆசிரியர் ஸ்ரீ ஜி ராமச்சந்திர நாயுடுவும் 'தாருல் இஸ்லாம்' ஆசிரியர் ஜனாப் தாவுத்ஷாவும், 'ஸைபுல் இஸ்லாம்' பிரதிநிதி ஜனாப் ஷர்புதின் சாஹிபு அவர்களும் இங்கு வந்து சில சந்தாதாரர்களை ஒவ்வொருவரும் சேர்த்துச் சென்றார்கள். பின்னர் 'சுதேசமித்திரன்' பிரதிநிதி ஸ்ரீ எஸ். நடேசய்யரும், 'தேசபக்தன்' ஆசிரியர் ஸ்ரீ கே. நடேசய்யரும், 'அருணகிரி' ஆசிரியர் ஸ்ரீ ராமநாதனும் சில சந்தாக்களைச் சேர்த்தனர். அத்துடன் 'சிந்தாமணி'யின் ஆசிரியை ஸ்ரீ சகோதரி வி. பாலாம்பாள் அவர்கள் ஒரு ஆண்டாய் இவ்விடங்களில் வாழ்ந்துகொண்டு ஜீவிய சந்தாதார்களும், வருட சந்தாதார்களும் மற்றும் பல நிதியும் சேர்த்து வருகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் 'குடி அரசு'க்கு சில சந்தாதார்களைச் சேர்க்கலாமென திரு. ஈ. வெ. கிருஷ்ண சாமிநாயக்கரவர்கள் இவ்விடம் வந்ததையறிந்த 'தமிழ் நாடு' ஆசிரியரும் காலத்தைக் கடத்தலாமென்பதின் பேரில் மறுமுறை கோலாலம்பூருக்கு வந்து தன்னுடைய பத்திரிகைகளுக்கு சந்தாதார்களைச் சேர்க்கப் பிரயத்தனப்பட்டதுடன் 'குடி அரசு'க்கு எவ்வளவு இடையூறு செய்ய வேண்டுமோ அதைச் செய்ய பின்னடையவில்லை.

சிறக, தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி சுயமரியாதை உணர்வளித்து வருவது 'குடி அரசு' பத்திரிகையும் அதன் ஆசிரியருமாவார்கள் என்பதை மறுமுறையும் ஐயமின்றி தெரிவித்துக் கொள்கிறேன். 'குடி அரசு'க்கு மூன்றாவது ஆண்டு முடிந்து நான்காவது ஆண்டு ஆரம்பிக்க இன்னும் சில வாரங்களே இருக்கின்றன. ஆகவே இந்நான்காம் ஆண்டு துவக்கத்தில் 'குடி அரசு' குறைந்தது 10,000 பிரதிகள் வெளிவரவேண்டுமென்ற அவசியத்தை ஒவ்வொரு சுயமரியாதைத் தொண்டரும் மறுக்கமாட்டார்கள் என்பது திண்ணம். எனவே ஆங்காங்குள்ள 'குடி அரசு" சுயமரியாதைத் தொண்டர்களும் தங்கள் தங்களால் இயன்ற வரையில் பிரயாசைப்பட்டு சந்தாதார்களைச் சேர்ப்பதுடன் ஆங்காங்குள்ள புத்தகசாலைகளிலும் ரயில்வே ஸ்டேஷன்களிலும் இன்னும் பிற பொது இடங்களிலும் 'குடி அரசு' பத்திரிகையை விற்பனை செய்வதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளும்படிக்கும வணக்கத்துடன் கைகூப்பி விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

தற்போது 'குடி அரசு'க்கு சுமார் 6000 சந்தாதாரர்களே இருக்கின்றார்கள் எனத் தெரிய வருகிறது. மேற்கொண்டு 4000 சந்தாதாரர்களை சேர்ப்பது தமிழ்மக்களுக்கு சிரமமான காரியமன்று. அதிலும் இப்பத்திரிகையின் சந்தா மிகவும் சொற்பம் விளம்பரக்காரர்களும் தங்கள் தங்கள் விளம்பரங்களை 'குடி அரசு'க்கு கொடுத்து இன்னும் நான்கு பக்கங்கள் அதிகமாய் பிரசுரிக்கும்படிக்கு ஆதரவளிப்பார்கள் என்றும் நம்புகின்றேன். மாணாக்கர்களும் இம்முயற்சியில் சிறிது ஈடுபடுவார்களேயானால் பல பதினாயிரம் சந்தாதார்களைச் சேர்த்து விடுவார்கள். ஆதலால் தமிழ் மக்கள் யாவரும் இம்முயற்சியிலீடுபடுமாறும் 'குடி அரசும்' வைக்கம வீரரும் நீடூழி வாழும்படிக்கும் அருள் புரிய எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்பால் இறைஞ்சுகின்றேன்.

கோ. சாரங்கபாணி.

சிங்கப்பூர்.

நயவஞ்சகப் பார்ப்பனர்

தாபி கிளப்பிற்கு

போகாதீர்கள்,

## அகில இந்திய தாழ்த்தப் பட்டவர் மகாநாடு.

### திரு, எம் சி இராஜா தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1 எல்லா மாகாணங்களிலும் கவர்னரது நிர்வாக சபையில் ஒரு தாழ்த்தப்பட்டவரை அங்கத்தினராக நியமிக்கவேண்டுமென்று மாட்சிமை தங்கிய அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

2 அரசாங்கத்தின் எல்லா இலாகாவிலுமுள்ள வழிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று இம்மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

3 ஒவ்வொரு மாகாணத்திலும் தாழ்ந்ததப்பட்டவர்களின் நலன்களைப் பாது காப்பதற்காக லேபர் கமிஷனர் நீங்கலாக ஆதிதிராவிடர்களிலிருந்தே டிப்டி கலெக்டர்கள் என்ற உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக்கேட்டுக் கொள்ளுகின்றது,

4 தாழ்த்தப்பட்டவர்களில் ஒருவரை அரசாங்க சபை அங்கத்தினராக நியமிக்க வேண்டுமென்று அரசப்பிரதிநிதியை வேண்டிக்கொள்ளுகின்றது.

5 மநு (அ) தர்ம சாஸ்திரத்தையும் ஸ்ரீ ஷேர்கான் எழுதிய 'ஷாமர் நாமா' புத்தகத்தையும் பறிமுதல் செய்யவேண்டுமென்று இந்திய அரசாங்கத்தாரைவற்புறுத்துகிறது.

6 பஞ்சாபிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களின் குறைகளைப்பற்றி விசாரணை செய்வதற்காக திருவாளர்கள் கவாய், தேவிதாஸ், மந்தால் முதலியவர்களடங்கிய கமிட்டியை நியமிக்கிறதென்றும் இக்கமிட்டியார் தயாரிக்கும் அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்க அதிகாரம் கொடுக்கிறதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

7 அமராவதியிலுள்ள அம்பாள் கோவிலிலும் மற்றும் பல இடங்களிலும் பிரவேசிப்பதன் சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சத்தியாக்கிரகத்திற்கு இம்மகாநாடு அநுதாபம் காட்டுகின்றது.

8 இந்தியாவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களே தொழிலாளர்களா யிருப்பதால் எல்லா மாகாணங்களிலும் தாழ்த்தப்பட்டவர்களையே தொழிலாளர்களின் பிரதி நிதியாக நியமிக்க வேண்டிய தன் அவசியத்தை இம் மகாநாடு வற்புறுத்துகின்றது.

9 கச்சுகாந்தரி மகாராஜா அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்காக வந்திபச்சு என்ற வரி போட்டிருப்பதால் தாழ்த்தப்பட்டவர்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறபடியால அதை ரத்துசெய்யவேண்டுமென்று மகாராஜாவைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

10 ஐக்கிய மாகாணம், பஞ்சாப், மத்திய மகாணம முதலிய இடங்களிலுள்ள நிலச்சுவான்தாரர்கள் யாதொரு கூலியும் கொடுக்காமல் ஏழை தாழ்ந்த வகுப்பினர்களிடமிருந்து வேலை வாங்கும் கொடிய வழக்கத்தை நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

## சிதம்பரத்தில்
# சுயமரியாதைப் பிரசாரம்.

தஞ்சை வாலிப மகாநாட்டுக்கு வந்திருந்த ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரை சிதம்பரம் வரவேண்டுமென்று சிதம்பரவாசிகள் சிலர் அழைக்க அவ்வழைப்புக்கு இணங்கி ஸ்ரீமான் நாயக்கரும் அகஸ்மாத்தாய் தஞ்சை ஸ்டேஷனில் சந்திக்க நேர்ந்த ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சுவாமிகளும் ஸ்ரீமான்கள் குஞ்சிதபாதம் பிள்ளை, ராமசாமி நாயனர், மு. லக்ஷிமண செட்டியார் ஆகியவர்களும் திங்கட்கிழமை காலை 10-மணிக்கு சிதம்பரம் வந்து சேர்ந்தார்கள். ரயில்வே ஸ்டேஷனுக்கு ஸ்ரீமான் சிதம்பரம், ராமலிங்கம் பிள்ளை முதலிய பல கனவான்கள் வந்திருந்து வரவேற்று மாலையிட்டு ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் மடத்திற்கு அழைத்துச்சென்றார்கள். பிறகு பகல் 4-மணிக்கு நாவலர் மடத்திலிருந்து மேளவாத்தியங்களுடன் கடைத்தெரு வழியே பெருத்த ஜனக்கூட்டத்துடன் ஊர்வலமாக மீட்டிங் ஸ்தலத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டது. வெகு சீக்கிரத்தில் சுமார் ஆயிரம் ஜனங்களுக்கு மேலாகவே கூடிவிட்டார்கள். கூட்டத்திற்கு வக்கீல் ஸ்ரீ ராமய்யா நாயுடு அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி பிரேரேபித்து ஆமோதிக்க கரகோஷத்தின் மீது ஸ்ரீமான் நாயுடு அக்கிராசனம் வகித்து ஸ்ரீ நாயக்கரை பேசும்படி கேட்டுக்கொண்டார். ஸ்ரீமான் நாயக்கர் மூன்றரை மணி நேரம் சுயமரியாதையைப்பற்றியும், அதற்கு இடையூறாயுள்ள மதம், பார்ப்பனீயம், அதன் கொள்கை என்பவைகளைப்பற்றியும் பேசினார்.

நாயக்கர் பேசி முடிந்து உட்கார்ந்ததும் ஸ்ரீமான்கள் முத்து கிருஷ்ண பிள்ளை, ரங்கநாதம் செட்டியார், காப்பிக்கடை திருநாராயண அய்யங்கார் ஆகியோர்கள் சிறிது சிறிது நேரம் பேசினார்கள். அவர்கள் பேசியதற்கு மறுமொழி சொல்ல தமக்கு சிறிது அவகாசம் கொடுக்க வேண்டுமென்று நாயக்கர் கேட்டுக்கொள்ள அக்கிராசனர் உத்திரவு கொடுத்தார். நாயக்கர் பிறகு பேசியதாவது:—எனக்கு முன்பேசிய மூன்று கனவான்களும் பேசியவற்றிற்குப் பின் நான் சில விஷயம் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். அதாவது முதலில் பேசியவர், தலைவர்கள் அடிக்கடி மாறுவதால் சுயராஜ்யம் தூரமாகி விடுகின்றது என்று சொன்னார்கள். நான் தலைவனல்ல. ஒரு தொண்டனாவேன். நான் எப்போதாவது மாறவும் இல்லை. பொது வாழ்வில் தொண்டு ஆரம்பித்த காலத்தில் நமது விடுதலைக்கு என்ன என்ன காரியங்கள் தடையாயிருக்கின்றது என்று சொன்னேனோ அதையே தான இப்போதும் சொல்லுகிறேன். தீண்டாமையும் வருணாசிரம தர்மமும் ஒழிந்தாலல்லது நமக்கு விடுதலை இல்லை என்பது எனது உறுதி. அதற்காக இப்போதும் பாடுபடுகிறேன். காங்கிரசினால் தீண்டாமையும் வருணாசிரமமும் ஒழியாது என்பது உறுதியானதால் நான் அதை விட்டு விட்டு அதற்காக தனியாய் பிரசாரம் செய்கின்றேன்.

ஸ்ரீமான் காந்தியை நான் மகாத்மா என்று கூப்பிடவில்லை என்கின்றார்.

ஸ்ரீமான் காந்தியை நான் மகாத்மா என்று கூப்பிட்ட காலத்தில் எனக்கு அவரிடம் இருந்தமதிப்பு இப்போது இல்லை. என்னவென்றால் இப்போது அவர் வருணாசிரம தர்மத்திற்கு வியாக்யானம் செய்ததில் பிறவியில் ஜாதி உண்டென்று சொல்வதோடு இந்த ஜன்மத்தில் பிராமணனுக்கு தொண்டு செய்தால்தான் அடுத்த ஜன்மத்தில் பிராமணனாகப் பிறக்கலாம் என்று சொல்லி இருக்கிறார். இதைக் கேட்ட பிறகு அவரை மகாத்மா என்று சொல்ல எனக்கு இஷ்டமில்லை. என்று சொன்னார்.

மற்றபடி மற்ற மதங்களிலும் பிரிவுகளும் மூடநம்பிக்கைகளும் இருப்பதாக சொல்லியிருக்கிறார்.

மற்ற மதங்களிலும் இருக்கின்றது என்கின்ற சமாதானம் போதாது. ஜன சமூகம் உண்மையான விடுதலை பெற மற்ற மதங்களிலும் உள்ள மூடநம்பிக்கைகளும் ஒழியவேண்டியது தான்.

ஆனால் இப்போது எனது வேலை அதுவல்ல. என் தலைமீதும் எனது சகோதரர்கள் மீதும் சுமத்தப்பட்ட மதத்தின் யோக்கியதை வெளியாகி மக்கள் உண்மையறிந்து அதிலிருந்து அறிவு பெற்ற பிறகுதான் நமக்கு மற்ற மதங்களின் சீர்திருத்தத்தைப் பற்றி பேச யோக்கியதை உண்டு. அதலால் மற்ற மதங்களில் ஊழல்கள் இருப்பதற்காக நாம் நமது மதம் என்பதின் ஊழல்களை மூடிவைத்திருக்க முடியாது. நான் தொட்டால், அருகில் சென்றால் செத்துப்போகும் சாமிகளைப்பற்றி அலக்ஷியமாய் பேசினதற்காக வருந்துவதாக பேசினார். நான் அதற்கு பரிதாபப்படுகின்றேன். நான் தொட்டால், நான் அருகில் சென்றால், செத்துப் போகும் சாமியை நான் வேஷ்டி துவைக்கக்கூட உபயோகிக்கமாட்டேன். யார் என்னை என்ன சொன்னாலும் சரி. எனக்குக் கவலையில்லை. அப்படிப்பட்ட குணம் ஏற்பட்ட உருவத்திற்கு என்ன பெயர் சொன்னாலும் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அதை வெறும் கல்லென்றும் செம்பென்றும் தான் சொல்லுவேன் என்றும் ஸ்ரீ முத்துகிருஷ்ண பிள்ளையை அனுசரித்து ஸ்ரீமான் ரங்கநாதம் செட்டியாரும் பேசியிருக்கிறாராதலால் அவருக்கு தனியாய் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. என்றும் ஆனாலும் முன் இந்தஊர் ஜில்லா மகாநாட்டுக்குத் தலைமை வகித்த காலத்தில் தீண்டாமை ஒழிய வேண்டுமென்பதையும் அதற்கு விரோதமாயுள்ள மதம், சாஸ்திரம், புராணம் என்பதையும் பற்றி அப்போது அதாவது சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன்னால் நான் 2-மணி நேரம் அக்கிராசனர் என்கின்ற முறையில் பேசியிருப்பதை ஞாபகப்படுத்திக்கொண்டாரானால், நான் ஏதாவது இப்போது மாறி இருக்கின்றேனா அல்லது காங்கிரசும் அந்த கூட்டத்தில் இப்போது இருப்பவர்களும் மாறி இருக்கின்றார்களா என்பது புலனாகும் என்றும் சொல்லி விட்டு ஸ்ரீமான் திருநாராயணய்யங்கார் பேசியதற்கும் மற்றதற்கும் பொதுவாக நீண்டபதில் உரைத்ததாவது:- ஸ்ரீ அய்யங்கார் வெகு நேரம் பேசியதில் குறிப்பாய் எடுத்துக் காட்டிய குற்றம் இன்னது என்பது எனக்குத் தெரியவில்லை என்று நாயக்கர் சொன்னதும் அய்யங்கார் எழுந்து 'நீங்கள் சாமியை கல்லென்று சொன்னீர்களே இது சரியா' என்றார்,

உடனே ஸ்ரீமான் நாயக்கர் ஆம் வேண்டுமானால் எல்லோரும் என்னுடன் வாருங்கள் காட்டுகின்றேன் என்று மேஜை மீதிருந்த கைத்தடியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். எல்லோரும் கைதட்டி சிரித்தார்கள். அய்யங்கார் பதில் சொல்ல வகையில்லாமல் தலை குனிந்தார்.

மற்றொரு பார்ப்பனர் — (பத்திரிகை நிருபர்) அந்த கல்லுக்கு மந்திர உச்சாடனம் செய்யப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்.

நாயக்கர்:—அப்படியானால் மொட்டைப் பாறையில் உடைத்த கல்லுக்கு செய்த மந்திர உபதேசம் உண்மையில் சக்தி உள்ளதானால் இதோ எதிரில் இருக்கும் சகோதரருக்கும் கொஞ்சம் அதே மந்திர உபதேசம் செய்து அவரை அந்த கல்லுச்சாமிக்குப் பக்கத்தில் இருந்து பூசை செய்யும்படியாக வாவது செய்யக்கூடாதா என்றார்.

அந்த அய்யரும் தலைகவிழ்ந்தார்.

மறுபடியும் ஸ்ரீ திரு நாராயணய்யங்கார் இந்து மதம் இல்லை என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நீங்களாவது ஒரு புது மதம் சொல்லுவது தானே என்றார்.

நாயக்கர்:— நான் ஒரு புது மதத்தை போதிக்க வரவில்லை. ஒழுக்கத்திற்கு விரோதமான கொள்கைகளை மதம் என்றும் சாமி என்றும் புராணம் என்றும் பின்பற்றாதீர்கள். ஒழுக்கமாகவும், சத்தியமாகவும் மற்றஜீவன்களிடத்தில் அன்பாகவும் பரோபகார எண்ணத்துடன் இருந்தால் போதும் என்றுதான் சொல்லுகின்றேன். அதற்குத்தகுந்த கொள்கைகள் எந்த மதமானாலும் சரி அது மதம் அல்லாவிட்டாலும் சரி என்று தான் சொல்லுகின்றேன்.

அய்யங்கார்:— இருக்கின்றதை மறைப்பதானால் புதிதாக ஒன்றைக் காட்டவேண்டாமா என்றார்.

நாயக்கர்:— வீட்டிற்குள் அசிங்கமிருக்கின்றது, நாற்றமடிக்கின்றது, எடுத்து எறியுங்கள் என்றால், அதற்குபதில் என்ன அந்த இடத்தில் வைக்கின்றது என்று ஏன் கேட்க வேண்டும். இந்து மதம் என்பதாக உலகமெல்லாம் நாறுகின்றதே அந்த துர்நாற்றம் போய்விட்டால் அதுவே போதும். நீங்களே இந்து மதம் என்பதாக ஒன்று இல்லை என்றும் சொல்லி ஒப்புக்கொண்டு விட்டீர்களே இனி நான் என்ன சொல்லவேண்டும்.

அய்யங்கார்:— நீங்கள் இவ்வளவு சமத்துவம் பேசுகின்றீர்களே உங்களுக்கு லக்ஷலக்ஷமாக சொத்துக்கள இருக்கின்றதே அந்த யேன் எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கக்கூடாது? உமக்குத்தான் பிள்ளை குட்டி இல்லையே என்றார்.

நாயக்கர்:— ஸ்ரீமான் அய்யங்கார் சொல்லுகின்றபடி எனக்கு ஒன்றும் அப்படிபெரு

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க



ஆனைத்தாயிர் ஒன்றென்றெண்ணி
அருப்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே.

# குடி அரசு

ஈரோடு பிரபவ ஷு மாசி மீ 21 உ

## பார்ப்பன சூழ்ச்சியும் பனக்கால் ராஜாவும்

டாக்டர் சுப்பராயன் அவர்கள் இப்போது பார்ப்பனர்களின் தாளத்திற்குத்தகுந்தபடி ஆடாததால் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து விட்டார்கள். நமது சட்டசபை என்பது பெரிதும் விளையாட்டுத்தனத்திற்கும், அயோக்கியத்தனத்திற்கும் உறைவிடமாய் விட்டதாக கருதவேண்டி இருக்கின்றதே தவிர ஏதாவது ஒரு கவுரவமோ, கண்ணியமோ, பிரதிநிதித்துவமோ பொருந்தியது என்று சொல்வதற்கில்லை. இந்த ஒரு வருஷத்திற்குள்ளாக 3, 4 தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டாய்விட்டது. இதைப் போன்ற விளையாட்டு விஷயங்களே மிகுதியும் சட்டசபையில் நடக்கின்றதேயல்லாமல் பொது ஜனங்களுக்கு அனுகூலமாக ஒரு காரியமாவது நடந்திருப்பதாகச் சொல்வதற்கில்லை. இப்போது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானத்தில் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் பார்ப்பனர் கட்சியாகிய காங்கிரஸ் என்கின்ற கட்சியில் 23 பேரும் மந்திரி கட்சியில் 7 பேரும் ஜஸ்டிஸ் கட்சியில் 6 பேரும் எழுந்து நின்றதாகத் தெரிகின்றது. ஆகவே ஷை மூன்று கக்ஷிகளிலும் பிளவு ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியிலும் 6 பேர்கள் எழுந்து நின்றதாக ஏற்பட்டதானது பெரிய முட்டாள்தனமான காரியம் என்றே சொல்லுவோம். ஜஸ்டிஸ் கட்சியார் பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக சர்க்காருடன் ஒத்துழைப்பதைப்பற்றியும், சர்க்காரோடு ஒத்துழையாமை செய்வதைப் பற்றியும், அவர்களும் பார்ப்பனர்களைப்போல் தேசிய வேஷம் போடுவதைப்பற்றியும் நமக்கு சிறிதும் கவலையில்லை. ஆனால் அந்த அறிவு அதாவது பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு என்கின்ற அறிவு ஒரு சிறிதும் இல்லாமல் மாற்றக் குழுவின் பேர் கொண்ட பார்ப்பன சூழ்ச்சிக்கு அனுகூலமான வழிகளில் பார்ப்பனருடன் ஒத்துழைக்கப்போவது நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஆபத்தான காரியம் என்பதே நமது அபிப்பிராயம். கொஞ்சகாலமாக பனக்கால் ராஜா அவர்களின் போக்கு மிகுதியும் ஒழுங்கற்றதாகவே போய்க்கொண்டிருக்கின்றது. கோயமுத்தூர் மகாநாட்டிலிருந்து குற்றத்தின்மேல் குற்றம் அறியாமையின் பேரில் அறியாமையாகவே நடவடிக்கைகள் நடந்து கொண்டு வருகின்றன. இது ராஜா அவர்களின் பெரிய யுக்தியான காரியமாயும் இருக்கலாம். அதனால் ஏதாவது சில வெற்றி ஏற்பட்டதாகவும் காணலாம். ஆனால் இதெல்லாம் பார்ப்பனரல்லாதார் கக்ஷி தேய்ந்துபோகும்படியானதாகிவிடும் என்று நாம் பயப்படுவதுடன் ராஜா அவர்களும் கண்டிப்பாய் சீக்கிரத்தில் உணரக்கூடும் என்றே சொல்லுவோம். டாக்டர் சுப்பராயனிடம் இப்போது ஜஸ்டிஸ் கட்சிக்கு ஏற்பட்ட அவநம்பிக்கை என்னவென்று கேட்கின்றோம். இந்த விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்குள்ளும் ஏன் பிரிவு ஏற்பட இடம் உண்டாகவேண்டும்? பார்ப்பனர்கள் சைமன் கமிஷன் விஷயமாய் இந்த நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டுவந்தார்கள் என்பது ராஜா அவர்களுக்குத்தெரியாதா என்று கேட்கின்றோம். உண்மையில் இரட்டை ஆட்சியை ஒழிக்கத்தீர்மானம் கொண்டு வந்திருந்தால் அது வேறு விஷயம். அப்படிக்கில்லாமல் இரண்டு மந்திரிகளை இரட்டை ஆட்சிக்கு உதவிபுரிய விட்டுவிட்டு பார்ப்பன ஆட்சியின் அனுகூலத்திற்காக ஒரு தீர்மானம் பார்ப்பனர் கட்சியார் கொண்டுவந்தால் அதற்கு பார்ப்பனரல்லாதார் கட்சித்தலைவர் என்பவர் உதவி அளிக்கலாமா? என்பது நமக்கு விளங்கவில்லை. சூதாடுவதில் லாபமே ஏற்பட்டாலும் அது கெட்ட காரியம் என்பதையும் அது எப்படியானாலும் கடைசியாக நஷ்டத்தையும் கஷ்டத்தையும் கொடுத்தேதீரும் என்பதையுமுணர்ந்து இனியாவது ராஜா அவர்கள் தயவுசெய்து இந்த அரசியல் சதுரங்கத்தை விடுத்து கட்சியை உருவாக்க முயற்சிப்பாராக.

---

## தேவஸ்தான நிர்வாகத்திலும் பார்ப்பனீயம்.

—:0:—

தஞ்சை தேவஸ்தானக் கமிட்டியார் நாடார்களை தேவஸ்தான கமிட்டி அங்கத்தவர்களாய் நியமிக்கக்கூடாது என்றும் அவர்களுக்கு கோவிலுக்குள் நுழைய அருகதை இல்லை என்றும் ஒரு தீர்மானம் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கின்றார்களாம்! இதை என்னமாதிரி அயோக்கியத்தனம் என்று சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இதைப்பற்றி எந்த தேசியப் பத்திரிகையும் எழுதாமல் 'சைமனே திரும்பிப்போ, எல்லாம் நாங்களே சாதித்துவிடுகின்றோம்' என்கின்றன. சைமனைத் திரும்பிப்போகச்சொல்லும் சில நாடார் வாலிபர்கள் நாடார்களுக்கு யாரிடம் இதைப்பற்றி சொல்லுவார்களோ தெரியவில்லை. அந்த கூட்டத்தார் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கும் கூலிக்கும் சைமனை பஹிஷ்கரித்தால் மற்றொரு கூட்டத்தார் தங்கள் அறியாமையால் பஹிஷ்காரப் பேர்வழிகளுடைய மாய்கையில் சிக்கிவிடுகின்றார்கள். ஐயோ பாவம்!

---

## பொய்ப் பெருமை.

சென்னையில் சைமன் கமிஷன் வந்து இறங்கிய தினத்தில் வேறு யாருடைய பிரயத்தனமும் இல்லாமல் பொது ஜனங்களாகவே வேலை நிறுத்தம் செய்ததாக சொந்தத்தில் பெருமை சம்பாதிக்க யோக்கியதை இல்லாதவர்கள் தங்களது பொய்ப் பிரசாரத்தால் பெருமை அடைகிறார்கள். இது அமாவாசை அன்றையதினம் சந்திரனுக்கு வெளிக்கிளம்பாமல் இருக்கும்படி உத்திரவு போட்ட வீரனின் பெருமைக்கேகுக்கும். எவனில் யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் பிராட்வே, சைனபஜார், முதலிய முக்கிய வியாபாரஸ்தலங்களில் ஞாயிற்றுக்கிழமையதினம் பெரும்பான்மையான கடைகளை மூடி விடுகின்ற வழக்கம் உண்டு என்பது தெருப்பொருக்கிக்குக் கூடத்தெரிந்த விஷயம். அதோடு போலீசையும் தடபுடலையும் சென்ற மாதம் 3தேதி காங்கிரஸ் காலித்தனத்தையும் கண்ட ஆசாமிகள் யாராவது இரண்டொருவர் அன்று வேறு வேலைக்கு போயிருக்கவும் கூடும். உதாரணமாக அநேக வக்கீல்களும் பார்ப்பன உத்தியோகஸ்தர்களும் கூட மூன்றாந்தேதி பயத்தினால் 26 தேதி தங்கள் பெண்டு பிள்ளைகளை வேறு ஊருக்கு அனுப்பி விட்டதாகவும் கேள்வி. இதுவும் 'தேசிய வீரர்' களின் பிரசாரந்தான போலும். இம்மாதிரி பொய்ப் பெருமையால் அரசியல் புரட்டர்கள் எத்தனை நாளைக்கு வாழமுடியுமோ தெரியவில்லை.

## இன்னும் அடி.

சைமன் கமிஷன் அர்த்தாலின்போது பார்ப்பனர்களை அடிக்க ஆரம்பித்தது இன்னும் நிற்கவில்லை என்று தெரிகிறது. அதாவது சென்ற வாரத்தில் ஒரு உத்தியோகப் பார்பனரை யாரோ சில காலிகள் வழிமறித்து நன்றாய்ப் புடைத்தார்களாம்! ரிக்ஷா வண்டிக்காரன் பயந்து ஓடினதற்கு ஓடாதே! ஓடாதே! உன்னை நாங்கள் அடிக்க வரவில்லை, இந்தப் பார்ப்பனனைத் தான் அடிக்க வந்தோம் என்று காலிகள் சொன்னார்களாம். ஆனால் சிலர் அந்தப் பார்ப்பனரை அடிப்பதற்குக் காரணம் வேறு விதமாகவும் சொல்லிக்கொள்ளுகிறார்களாம் அதாவது ஆபிசில் உத்தியோக கோரணையில் அவர் செய்யும் கொடுமையால் இம்மாதிரி ஏற்பட்டதென்கிறார்களாம். எப்படி இருந்தாலும் இது மிகவும் ஆட்சேபிக்கத்தக்கது. எனவே இதை அடக்காமல் இருப்பது யோக்கியமல்ல.

## சைமனுக்கு பார்ப்பனர்களின் விருந்து.

ஸ்ரீமான் சர். சி. பி. ராமசாமி அய்யர் என்கிற பார்ப்பனர் சைமன் கமிஷனுக்கு ஒரு விருந்து வைத்து பார்ப்பனர்களுக்கும் அழைப்பு அனுப்பி எல்லா பார்ப்பனர்களையும் அறிமுகம் செய்து வைத்ததோடு அவரிடம் பார்ப்பனப் பிரசாரமும் செய்யப்பட்டு விட்டது. இதைப்பற்றி பேசுவோர் யாருமில்லை. தேசிய வீரர்களும் தேசியப்பத்திரிகைகளும் தங்களை மறைத்துக் கொண்டனர். பார்ப்பனரல்லாதார் யாராவது பகிஷ்காரப்புரட்டில் கலவா விட்டால் அல்லது பகிஷ்கார புரட்டர்களின் யோக்கியதையை வெளியாக்கினால் அதற்குப் பெயர் பக்தர்கள் பாவசாமாம், அல்லது சர்க்கார் தாசர்களாம். என்னே அரசியல் அயோக்கியத்தனம்!

## சைமனுக்காக சட்ட சபை பகிஷ்காரம்.

சைமன் சென்னையில் இருக்கும் தினத்தன்றே நமது தேசிய வீரப்புலிகள் சட்ட சபைக்குப் போய் தங்கள்பெயர்களைப்பதிவு செய்து பிரயாணப்படி வாங்கி வந்து விட்டார்கள். காங்கிரஸ் சட்ட சபைக்கூலிக்காரர்களின் சட்டசபை பகிஷ்காரக் கூச்சலுக்கு இதைவிட வேறு என்ன யோக்கியதை வேண்டும். இவர்களை நம்பி எத்தனையோ சோணகிரிகள் இன்னமும் ஏமாந்து போகிறார்கள் என்றால் இவர்களுக்கு என்ன மாதிரி சுயராஜ்யம் கொடுப்பது என்பது நமக்குப் புரியவில்லை.

## கோவை செங்குந்த வாலிப வாசகசாலை திறப்புவிழா,

சென்ற 2-3-28-ல் காலை ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், எஸ். ராமநாதன், பி. வெங்கிடாசலம் ஆகியோர்கள் ஈரோட்டிலிருந்து இரண்டாவது மெயிலில் கோயமுத்தூர் வந்து சேர்ந்தார்கள். இவர்களை வாசகசாலை பிரமுகர்கள் ரயிலில் வரவேற்று மாலையிட்டு வாசகசாலை கட்டிடத்திற்கு அழைத்துப் போய் விருந்தளித்து, மாலை 4-மணிக்கு பாண்டு வாத்தியங்களுடனும் மேளவாத்தியங்களுடனும யானை வகையரா விருதுகளுடனும் மோட்டாரில் ஊர்வலம் செய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்ரீமான் நாயக்கர் இவற்றை ஒப்புக்கொள்ளாததால் நிறுத்தி விட்டு மகாத்மா படத்தை மோட்டாரில் வைத்து பெரும் கூட்டமாக மேல் கண்ட வாத்தியங்களுடன் ஊர்வலமாக வந்து 5-மணிக்கு ஸ்ரீமான் நாயக்கரால் வாசகசாலை திறப்பு விழா செய்யப்பட்டது.

பிறகு ஸ்ரீமான் நமசிவாய முதலியாரவர்கள மண்டபத்தில் ஸ்ரீமான் நாயக்கர் அவர்களுக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தது அவரது அக்கிரானத்தில் ஸ்ரீமான்கள் கோவை வக்கீல் கனவான்கள் சி. கே சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கல்வி என்பது பற்றியும சி. எம். ராமச்சந்திரம் செட்டியார் அவர்கள் 'சங்கமும் அதன் நன்மைகளும்' என்பது பற்றியும் அழகும் அற்புதமும் வாய்ந்த உபந்நியாசங்கள் செய்தார்கள். ஸ்ரீமான் நாயக்கர் முடிவுரையாக உபந்நியாசகர்களை சிறப்பித்தும் சார்ந்தும் பேசி.ஒழுக்கம் பெற்று மூட நம்பிக்கைகளை ஒழித்து சுயமரியாதை அடைவதே நமது கல்வியினுடையவும் சங்கங்களினுடையவும் பலனாயிருக்கவேண்டுமேயொழியபுராணங்களைப்படித்து முருகன் படத்திற்கும்சரஸ்வதி படத்திற்கும் கற்பூரத்தை காட்டி வீட்டை கரிப்புகையாக்குவதே நமது லக்ஷியமாய் இருக்கக்கூடாது என்று பல உதாரணங்களுடன் எல்லோரும் ஒப்பத்தக்க முறையில் விளக்கிக்காட்டினர்.

பிறகு ஸ்ரீமான் என். லக்ஷமண முதலியார் அவர்கள் வந்தனோபசாரம் சொல்லுகையில் ஸ்ரீமான் முதலியாரின் கல்வியைப் பற்றியும ஸ்ரீமான் செட்டியாரின் ஆராய்ச்சியைப்பற்றியும்பொதுநன்மையில் உள்ள ஊக்கத்தைபற்றியும் சபையைப்பற்றியும் சொல்லிவிட்டு ஸ்ரீ நாயக்கர் தொண்டினால் தேசம் பெறப்போகும் சுதந்திரத்தைப் பற்றியும் சமத்துவத்தைப்பற்றியும் பேசி, புத்தர், ராமானுஜர், மார்டின் லூதர் முதலியவர்களுக்கு ஒப்பிட்டு வெகு ஆவேசமாய்ப் பேசினர். கூட்டத்திற்கு அநேக பெரியார்களும் பெண்மணிகளும் வந்திருந்தார்கள்.

ஒரு நிருபர்.

## அதிசய விருந்து.

ஈரோட்டிற்கு சென்ற வாரம் முதல் மந்திரி வந்திருந்த சமயம் ஒரு விசேஷம் நடந்தது. அதாவது கோவை ஜில்லாவில் உள்ள கொங்கு வேளாள கனவான்களுக்குள்ளாகவே சிலர் அதாவது பட்டக்காரர்கள் என்கின்ற கனவான்கள் அந்த சமூகத்தார் பந்தியில்கூட உட்கார்ந்து உண்வருந்தும் வழக்கம் இதுவரை நடந்ததில்லை. ஆனால் முதல் மந்திரிக்கு அளித்த விருந்தின்போது பட்டக்காரர்களில் மிக செல்வாக்குப் பெற்றவரும் ஈரோடு தாலூகா போர்டு பிரசிடெண்டுமான பழயகோட்டை பட்டக்காரர் ஸ்ரீ ராய் பஹதூர் நல்ல தம்பிச்சர்க்கரை மன்றாடியார் அவர்கள் தாராளமாக இந்து முஸ்லீம் கிருஸ்தவர்கள் ஆகிய கனவான்கள் அடங்கிய கூட்டத்தில்கலந்து சமபந்தி இருந்து விருந்துண்டார்கள். இது மிகவும் முற்போக்கான காரியமாகும். இதைப் பின்பற்றியாவது அச்சமூகத்தில் மற்ற சாதாரண கனவான்கள் நடந்துகொள்ளக் கூடாதாஎன்று ஆசைப்படுவதுடன் ஸ்ரீ பட்டக்காரர் அவர்களையும் அவர்களது தாராள நோக்கத்தை பாராட்டி மனதார வாழ்த்துகின்றோம்.

## 'சேலத்தில் தேசீயம்'

சைமன் கமிஷன் சென்னைக்கு வந்திறங்கிய தினத்தில் சேலத்தில் சுமார் 500 மகம்மதிய கனவான்களும் மற்றும் சிலரும் தேசீயக் கொடியுடனும் யூனியன் ஜாக்குடனும் சைமன் கமிஷனை வரவேற்பதாக ஊர்வலம் சென்றார்கள். ஒரு நிருபர்.

## மயூர தேச பக்தர்.

### திரு. சி சொக்கலிங்கம் பிள்ளை காலஞ் சென்றார்,

மாயூரத்திற் கருகிலுள்ள தேரெழுந்தூர் ஸ்ரீ சி. சொக்கலிங்கம்பிள்ளை அவர்கள் சென்றவாரம் சனியன்று தமது 53ம் ஆண்டில் காலமசென்றார்கள் என்று கேள்விப்பட்டு வருந்துகிறேன்.

ஸ்ரீமான் பிள்ளை தன் பள்ளி காலத்தில் தேச சரித்திரங்களை வாசித்தது முதற்கொண்டு அன்னிய ஆட்சியில் வெறுப்புக்கொண்டுசென்ற 24 வருஷங்களாக அயல் நாட்டு சாமான்களை அடியோடு பகிஷ்கரித்ததையும்ஆர்ப்பாட்டமற்றதேசபக்தியையும்தெரிந்தநண்பர்கள் அவர்களின் மரணத்தைக் குறித்து வருந்துவார்களென்பதில் ஐயமில்லை.

சுருங்கச்சொல்லின் பிள்ளை அவர்கள் நோய்வாய்ப்பட்டு மரண அவஸ்தையிலிருக்குமபொழுது, சுற்றத்தார் டாக்டர்களை தருவித்து பார்க்கச் சொன்னபொழுது, பிள்ளை அவர்கள் அயல் நாட்டு வயித்தியம் மருந்தைக்கொண்டு உயிர் வாழ்வதைவிட மரணத்தை விசேஷமாகக் கருதி சிகிச்சையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்களென்றால் அவர்களுடைய தேச பக்தியையும், வைராக்கிய சித்தத்தையும் நான் கூற அருகனல்லன் என்றுதான் சொல்ல முடியும்.

ஸ்ரீமான் பிள்ளையின் பரிசுத்த வாழ்க்கையைக் கண்ட தஞ்சை ஜில்லா தனபதி சீர்காழியில் வதியும் சாந்தமே உருவான ஸ்ரீமான் சிதம்பரநாத முதலியாரவர்கள் தம் எஸ்டேட்டில் ஒரு பகுதியை இவர்கள் வசம்ஒப்புவித்துபரிபாலிக்கச் செய்தார்கள். ஸ்ரீ பிள்ளை தீண்டப்படாதார்எனப்படும்மக்களிடை துவேஷம் வேற்றுமை பாராட்டாது வேளாண்மை செவ்வனே நடத்தி வந்தார்கள்.

ஸ்ரீமான் முதலியாரவர்களின் பெரும்பான்மையான எஸ்டேட்டில் மதுபானத்தை ஒழித்து கதர் அபிவிருத்தி செய்து கூடுமானவரையில் அன்னிய சாமான் பகிஷ்காரத்தை செய்து வந்தார்கள்.

இவ்வுத்தம தேச பக்தரை இழந்த மயூர் மாத்திர மன்று தாய் நாடே வருந்துமென்பதில் ஐயமில்லை என்று திரு. ஆர் சின்னயா பிள்ளை, எழுதுகிறார்.

### பூளைமேடு P. S. கோவிந்தசாமி நாயுடு & சன்ஸ், அறநிலையச் சர்வ ஜனக் கல்லூரி விடுதி மாணவர் கழக

## மூன்றாம் ஆண்டு விழா.

நிகழும் பிரபவ ஆண்டு மாசித் திங்கள் 27-ம் நாள் (10—3—28) சனிக்கிழமை மாலை 2 மணிக்கு எமது விடுதி மாணவர் கழக மூன்றாம் ஆண்டு விழா நடை பெறும்.

அதுபொழுது மகிபாலன்பட்டி திருமிகு பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் புலவர் பெருமக்கள் பலர் விரிவுரை நிகழ்த்துவார்கள். அதுகாலை அன்பர்கள் தமருடன் வந்து கேட்டு இன்புற வேண்டுகின்றேம். அமைச்சர்.

9-ம் பக்கத் தொடர்ச்சி.

வாரியான சொத்துக்கிடையாது. ஏதோ சுவல்ப வரும்படிதான் வரக்கூடியதாயிருக்கின்றது. அதையும் எனக்கு சரியென்றுதோன்றிய வழியில் பொது நலத்துக்குத்தான் செலவு செய்து வருகிறேன். அல்லாமலும் இந்த தொண்டுக்கு வருமுன் பெருவாரியாக வியாபாரமும் செய்து வந்தேன் வருஷம் ஒன்றுக்கு 1,000 ரூபாய்கூட இன்கம்டாக்ஸ் செலுத்தி இருக்கின்றேன். ஆனால் அவைகளை இப்போது அடியோடு நிறுத்தி விட்டேன். இந்த பிரசாரத்திலேசெலவுகிலசமயம் மாதம் 200, 300 ரூபாய் வீதம் ஆகிவருகிறது மற்றும் அநேக செலவுகளும் இருக்கின்றன. நான் ஒன்றும் அதிகமாய் அனுபவிப்பதில்லை. நான் அநேகமாய் மூன்றாவது வகுப்பு வண்டியில்தான் போகிறேன். அப்படி இருந்தும் நான் ஒன்றும் பிடித்து வைப்பதுமில்லை.

அய்யங்கார்:— புரோகிதத்தைப் பற்றி இழிவாய்ப் பேசினீர்கள். நான் புரோகிதத்திற்குப் போவதில்லை, பிச்சைக்கும் போவதில்லை, காப்பிக்கடை வைத்து எச்சில் கிண்ணம் கழுவி பிழைக்கிறேன். எல்லாவையும் ஒன்றாகக் கண்டிக்கிறீர்கள் அப்படியானால் என்னதான் செய்கின்றது? எந்த புஸ்தகத்தைத்தான் படிக்கிறது?

நாயக்கர்:— நான் குறிப்பிட்டு யாரையும் சொல்லுவதில்லை. மனிதத்தன்மைக்கு விரோதமான குணம் யாரிடமிருந்தாலும் மனிதனின் சுபாவத்திற்கும், சமத்துவத்திற்கும், சுயமரியாதைக்கும் விரோதமான கொள்கைகளும் கதைகளும் எதிலிருந்தாலும் அவைகளை ஒதுக்கி சுட்டுப் பொசுக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். (என்று ஆவேசமாய் சொல்லி கடைசியாக முடிவுரையாகச்சொன்னதாவது) இந்தஊர் எவ்வளவோ நல்ல ஊர் என்றுதான் சொல்வேன். சில ஊர்களில் கல்லுகள் போடவும் கூட்டத்தில் கலகம் செய்யவும் கூச்சல் போடவும்கூட பார்த்திருக்கிறேன். இதெல்லாம் எனக்கு அனுபவிப்பது சகஜம்தான். எவ்வளவுக்கெவ்வளவு எதிர்ப்பு ஏற்படுகின்றதோ, எவ்வளவுக்கெவ்வளவு எதிர்ப்பிரசாரங்கள் ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு எனது வேலை சுலபமாகும், எனது எண்ணமும் நிறைவேறும் என்கின்ற தைரியம் எனக்கு உண்டு. இம்மாதிரி வேலைகளை ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் இருந்தே பலர் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் அந்த சமயம் இருந்த அரசர்கள் முட்டாள்களாகவும் படிக்காதவர்களாகவும் பார்ப்பனர்களால் மயக்கப்பட்டவர்களாகவும் இருந்ததினால் அது பலிக்காமல் போய்விட்டது. "ராம ராஜ்ய" மாகவோ, "பாண்டிய ராஜ்ய" மாகவோ இருந்தால நான் இதுவரை 'ஓம்' பாணத்தால கொல்லப் பட்டிருப்பேன. அல்லது சமூகவேற்றப்பட்டிருப்பேன். நல்லவேளையாக அந்த அரசாங்கங்கள் மண் மூடிப்போய்விட்டது. வேறு ஒரு லாபமும் இல்லாவிட்டாலும் நமது பணம் கொள்ளை போனாலும், மனிதனின் சுயமரியாதையைப் பற்றியாவது வெள்ளைக்காரர் ராஜ்யத்தில் இதுவரை தாராளமாக பேச இடம் கிடைத்து விட்டது. சுயமரியாதை விஷயத்தைப் பற்றியாவது பேசிவிட்டு. இனி நான் கொல்லப்பட்டாலும் சரி. நான்கு நாள் முன்னேறு பின்னோ சாகவேண்டியதுதான். வீட்டில் உயில் எழுதி வைத்துவிட்டுத்தான் நான் இத்தொண்டிற்கு பிரவேசித்திருக்கிறேன். ஒவ்வொரு பயணத்திற்கும் முடிவாக பயணம் சொல்லிக்கொண்டுதப்பிப் பிழைத்தால்தான் திரும்பி வர முடியும் என்று என் பெண்ஜாதிக்கும் தாயாருக்கும் முடிவு சொல்லி உத்திரவு பெற்றுத்தான் நான் பயணம் புறப்படுகின்றது வழக்கம். நான் பேசிக்கொண்டிருக்கும் போதே உயிர்விட வேண்டும் என்பது எனது ஆசை. இனி நான் எடுத்துக்கொண்ட வேலை அவ்வளவு பெரியதும் பல எதிரிகளைக் கொண்டதும் தக்க விலை கொடுக்க வேண்டியதுமானது என்று எனக்குத் தெரியும். ஆதலால் இனி நாஸ்திகம் என்ற பூச்சாண்டிக்கும் தேசத் துரோகம் என்ற பூச்சாண்டிக்கும் இனி பயப்படுவது என்பது முடியாதகாரியம். ஆயிரந்தாம் சொல்லுகின்றோம் நாம் கும்பிடும் சாமிகளும் நமது கோயிலில் உள்ள சாமிகளும் வெறுங்கல் வெறுமசெல். நமது தேசிய இயக்கம் என்கிற காங்கிரஸ் முதலியவைகள் வெறும் புரட்டு வெறும் புரட்டு என்பது எனது முடிவு. யார் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரி. நான் யாருக்கும் பொதிசுமக்க வரவில்லை. எனக்குப் பட்டதைச் சொல்லவந்தேன். சரியானால் ஒப்புக்கொள்ளுங்கள். தப்பானால் தள்ளிவிடுங்கள். சாமி போய் விடுமே என்று யாரும் சாமிக்காக வக்காலத்து பேச வேண்டியதில்லை. பேசினாலும் நான் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. உண்மையான கடவுளும் உண்மையான தேசியமும் எனக்குத் தெரியும். அதை வெளியிடும் தொண்டு தான் இது என்று பேசி உட்கார்ந்தார். உடனே அக்கிராசனர் இனியாராவது பேச வேண்டுமா என்றும் இதற்கு யாராவது பதில் சொல்லுகிறீர்களா என்றும் கேட்டார். 2 நிமிஷம் நிஸ்சப்தமாய் இருந்தது. ஒருவரும் பேசவில்லை என்று சொல்லிவிட்டு ஒரு கனவான் ராயல்கமிஷன் பகிஷ்கார விஷயமாக ஒருதீர்மானம் கொண்டுவந்தார். அதைச்சிலர் பகிஷ்காரத்திற்காக இக்கூட்டம் கூட்டவில்லை என்று ஆட்சேபித்தார்கள். ஸ்ரீமான் நாயக்கர் எழுந்து அதைப்பற்றி கவலை இல்லையென்றும தான் அதையும எதிர்ப்பதாகவும் சொல்லி அதைப்பற்றி சில விஷயம் பேச அக்கிராசனரை அனுமதி கேட்டார். மணி சுமார் பத்தாய்விட்டதால் சீக்கிரம் சொல்லி முடிக்கும்படி சொன்னார். ஸ்ரீமான் நாயக்கர் வெகுவேகமாக ஆரசில் புரட்டையும் பகிஷ்காரப் புரட்டையும் சொன்னார். பிறகு ஸ்ரீமான காப்பிக்கடை திருநாராயணய்யங்கார் பேசிஓட்டுக்குவிட்டார். சிலரேகை தூக்கியதால் தோல்வி உற்றதாக அக்கிராசனர் சொன்னார். மறுபடியும் ஓட்டு எடுக்க கைதூக்கச் சொல்லும்படி அக்கிராசனரை அய்யங்கார் வேண்டிக்கொண்டார்; அக்கிராசனர் மறுபடியும் தீர்மானத்திற்கு சாதகமானவர்கள் கை தூக்கும்படி சொன்னார். வெகுசிலரே கைதூக்கினர்கள். பாதகமானவர்களை தூக்கும்படி சொல்லாமலும் முடிவு சொல்லாமலும் அக்கிராசனர் முடிவுரை துவக்கி கூட்டத்தை முடித்து விட்டார் பிறகு வந்தனோபசாரம் கூறப்பட்டது. சுமார் 6 மணி முதல் 10 மணிக்கு மேலாக அதாவது 4-30 மணி நேரம் மக்கள் சுமார் ஆயிரம் பேருக்கு மேல் அசையாமல் பொறுமையுடன் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. இதுவரை இம்மாதிரி கூட்டம் பொறுமையாக 4-30 மணி நேரம் உட்கார்ந்து கேட்டதில்லை என்று சொல்லலாம். இனியும் 2 மணி நேரம் பேசினாலும் இருக்க ஜனங்களுக்குப் பிரியம் தானே யொழிய யாரும் நேரத்தை கவனிக்கவில்லை. தவிர பேசியவர்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் கண்ணியமாயும் போக்கியமாயும் பேசிக்கொண்டார்களே யொழிய நியாயத் தப்பாய்யாரும் பேசிக்கொள்ள வில்லை. கூட்டமுடிவுக்கு நம்பிப்போகும்போது மாத்திரம் வழியில் பார்ப்பனர்களைப்பற்றியும் அவர்கள் சூழ்ச்சிகளைப்பற்றியும அவர்கள் கையாள்களாயிருக்கும் பார்ப்பனரல்லாத ஆள்களைப்பற்றியும் பத்திரிகைகளைப் பற்றியும் மிகச்சுவலமாக பேசிக் கொண்டார்கள். நாயக்கர் வரவால் சிதம்பரம் ஒரு வித புத்துயிர் பெற்றதென்றே சொல்லவேண்டும்.

ஒரு நிருபர்

---


## டெண்டர் விளம்பரம்.

பழயகோட்டைக்குப் பக்கத்தில் ஈரோடு காங்கயம் ரோட்டின் 17/7-18/0 மைல் நொய்யலாற்றுக்கு ரூ. 51,000 மதிப்புக்கு ஒரு பாலம் கட்டவேண்டியிருப்பதால் அதற்கு சில் செய்த டெண்டர்கள் அனுப்பிக் கொள்ளலாம், இரும்பு சாமான்கள் டிபார்ட்மெண்டு மூலமாய் சப்ளை செய்யப்படும்.

(2) ஷை வேலைக்குக் குறித்த ப்ளான், எஸ்டிமேட், காண்ராக்ட் நிபந்தனைகள் முதலிய விஷயங்கள் கோயமுத்தூர் டிஸ்டிரிக்ட் போர்டு இஞ்ஜினீர் ஆபீசில், ஆபீஸ் நாட்களில் பகல் 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரையில் கண்டு கொள்ளலாம்.

(3) அடியில் கையொப்பமிட்டவர்க்கு 1928-ம் வருஷம் மார்ச்சு மாதம் 15-தேதிக்குள் டெண்டர்கள் அனுப்பிக்கொள்ளவேண்டியது.

கோயமுத்தூர், 1—3—1928. } ஆர் எல். மல்லாய், டிஸ்டிரிக்ட் போர்டு இஞ்ஜினீயர்.

தஞ்சை ஜில்லா

## பார்ப்பனரல்லாத வாலிபர்கள் 2-வது மகாநாடு.

அளவுக்கு மீறிய ஊக்கம் பெருத்த ஆரவாரம்.

பிப்ரவரி 26உ ஞாயிற்றுக்கிழமை காலை ரெயிலில் திருவாளர்கள் தலைவர் சக்கரை செட்டியார், கண்ணப்பர், பிட்மென் துரை, ஈ. வெ ராமசாமி நாயக்கர், விஸ்வநாத பிள்ளை முதலியோர்களும் நாகபட்டணம் திருவாரூர் மாயவரம் கும்பகோணம் திருச்சி மதுரை திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்தும் பல வாலிப பிரதிநிதிகளும் பெருங்கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். காலை 3-30 மணி சுமாருக்கு ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஸ்ரீமான்கள் சக்கரை செட்டியார், சேவியர், ஆரியா, ராமசாமி நாயக்கர் முதலியவர்கள் இரட்டைக் குதிரை சாரட்டு வண்டியிலும் ஸ்ரீமான்கள் பன்னீர்செல்வம் உமாமஹேஸ்வர பிள்ளை முதலியோர்களும்ஸ்ரீமதி நாயகம் அம்மாள் பி. எ. ஸ்ரீமான்கள் கண்ணப்பர் பிட்மேன் முதலியவர்களும் மோட்டாரிலும் நாகசுர மேள வாத்தியங்களுடனும் கன்செட் வாத்தியங்களுடனும் பாண்டு வாத்தியங்களுடனும் தியாகராயருக்கும் நாயருக்கும் நாயக்கர் முதலியோருக்கும் ஜே சப்தம் முழங்கவும் ஸ்ரீ வாண்டையாரின் சேனை ஆட்கள் நூற்றுக் கணக்கான பேர்கள் கொடிகளுடனும் சுமார் 200 மாணவ தொண்டர்கள் அணிவகுத்து அலங்காரத்துடன சுமார் 1000 பேருக்கு மேலாகவே புடைசூழ்ந்துவர ஊர்வலமாக கொட்டகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தெருநெடுக அருமையான சுயமரியாதைப் பொருள்கள் கொண்ட பெரும் பெரும் வளைவுகளும் தோரணங்களுமாய் அலங்கரிக்கப் பட்டிருந்தது. சுமார் 10 மணிக்கு ஊர்வலம் மகாநாடு கொட்டகை வந்தடைந்ததும்ஸ்ரீ பன்னீர்செல்வம் அவர்களால் அருமையான உபந்யாசத்துடன் வாலிபக் கொடியேற்றம் பெரும் ஆரவாரத்துடன் செய்யப்பட்டது. பிறகு ஒரே குயபலாக எல்லோரும ஜே! சப்தத்துடனும் கைதட்டலுடனும் ராவ்பகதூர் ராமநாத செட்டியார் அவர்கள் பொது நலத்திற்கு உதவிய கொட்டகைக்கு அழைத்துச் செல்லப்பட்டது. மகாநாட்டுப் பந்தலாகிய அக்கொட்டகையானது அநேக நீதி வாக்கியங்களும் சுயமரியாதை வாக்கியங்களும் பார்ப்பனக் கொடுமைகளும் தலைவர்கள் வாழ்த்துகளும் கொண்ட விளம்பரங்கள் கட்டித் தொங்கவும் தழைகளாலும் கொடிகளாலும் அலங்கரிக்கவும் பட்டிருந்ததோடு ஏற்கனவே ஏராளமான பிரதிநிதிகள் டிக்கட்டுகளுடன் பதிவு செய்து கொண்டும் மேடையிலும் கீழுமாக நிரம்பி இருந்தார்கள். கொட்டகை மேடையில் வீற்றிருந்த முக்கிய கனவான்கள் பெயர் முழுவதும் அறிய சாத்தியப்படவில்லை. ஆகையால் சிலர் பெயர்மாத்திரம் தான் குறிக்க முடிந்தது.

அவர்களில் ஸ்ரீமான்கள் சிரப்பவாண்டயர், பன்னீர்செல்வம், உமாமகேஸ்வரம் பிள்ளை, குமாரசாமி பிள்ளை, ஆரியா, டி. எ. ராமச்சந்திரம செட்டியார், அளகிரிசாமி நாயுடு, வேணுகோபால் நாயுடு, திருஞானசம்பந்த முதலியார், ராஜதுரை செட்டியார், டேவிட்நாடார், கணபதிராவ்பிள்ளை, வெங்கிடசாமி நாட்டார், வெங்கிட்டாசலம் பிள்ளை, ராவ்பகதூர் ராமநாதஞ் செட்டியார், பிட்மென், சேவியர், சக்கரை செட்டியார், பிட்மென் துரை, மன்னார்டையர் காரைக்குடி முருகப்ப செட்டியார், சோமசுந்திரம் பிள்ளை, ஸ்ரீமதி வள்ளியம்மை, ராமாமிர்தம் அம்மாள், ஸ்ரீமதி பிட்மென், நடராஜ முகலியார், ஆர். சி வெங்கட்டராம நாயுடு, கருப்பணசாமி நாடார் முதலிய அநேக கனவான்களும் பந்தலில் சுமார் 1500 பிரதிநிதிகளும் கூடியிருந்தார்கள். கூட்ட ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்து சொல்லப்பட்டு திருவாளர்கள் தியாகராயர், நாயர் பெருமான், வைக்கம்வீரர் ஆகியோர்கள்மீது வாழ்த்துப் பாட்டுகள் முறையே திருவாளர்கள் நாகை ராஜா, காந்தை மகாலிங்க முதலியார், திருச்சி ராவணதாசன், ஆகியோர்களால் கேட்ப்போர் ஆனந்தமடையும்படி பாடப் பட்டன. பிறகு ஸ்ரீமதி வள்ளியம்மை அவர்களின் அருமையான பிரசங்கத்துடன் மகாநாடு திறக்கப்பட்டது. பிறகு திருவாளர் சேவியர் அவர்கள் வரவேற்பு உபந்யாசம் செய்த பிறகு மகாநாட்டுக்கு அனுப்பப்பட்டவாழ்த்துக் கடிதங்களும் தந்திகளும் படிக்கப்பட்டன. அவை மிகவும் அதிகமாயிருந்ததால் முழுதும் வாசிக்கமுடியாமல் பெயர்கள் மாத்திரம் சொல்லப்பட்டன. பிறகு தலைவரை ஸ்ரீமான்கள் ஈ. வெ ராமசாமி நாயக்கர் பிரேரேபிக்க, ஸ்ரீமான்கள் டி. வி. உமாமகேஸ்வரம் பிள்ளை, ஆரியா, கண்ணப்பர், சோமசுந்திரம் பிள்ளை, டி. ஆர். மருதமுத்து மூப்பனர், அளகிரிசாமி நாயுடு ஆகியோர்களால் தலைவர் ஸ்ரீமான் சர்க்கரை செட்டியார் அவர்களின் பொதுநலசேவையும் அவரது பெருமையும் சொல்லப்பட்டு ஆமோதிக்கப்பட்டு பெருத்த ஆரவாரத்துடன் நிறைவேற்றப்பட்டு ஸ்ரீமான் சக்கரை செட்டியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். இக்காட்சி மிகவும் அதிசயிக்கத்தக்கது. ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் அக்கிராசன உபந்யாசம் நடந்ததும் மகாநாடு பகல் சாப்பாட்டிற்கும் விஷயாலோசனைக்கும் ஒத்திப்போடப்பட்டது. இதன் மத்தியில் ஒரு விசேஷ சம்பவம். மகாநாடு அக்கிராசனர் பிரேரேபனையின்போது ஒரு சுயமரியாதைத் தொண்டர் எழுந்து 'நாங்கள் எல்லோரும் பார்ப்பனரல்லாதார் கடைகளில் காலை ஆகாரம் வாங்கி சாப்பிட்டிருக்க, தலைவர்கள் என்பவர்கள் மாத்திரம் பார்ப்பனர்களிடமிருந்து வாங்கி வந்து வழங்கலாமா' என்று மிகவும் ஆவேசத்தோடு பேசினார்- வரவேற்புக் கமிட்டிக்காக ஸ்ரீமான் உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்கள் தக்கபடி மிகப் பொறுமையாகவும் இனிமையாகவும் சமாதானம் சொல்லியதுடன் இனி அம்மாதிரி நடக்காமலிருக்க முயற்சிப்பதாகவும் சொன்னார். இது சமயம் சபையோருக்கு ஏற்பட்ட ஆனந்தம் அளவிடற்பாலதல்ல, பகல் உணவு நடந்ததும் தஞ்சை ராஜா சத்திரத்தில் விஷயாலோசனைக்கூட்டம் கூடினது. மகாநாட்டில் தீர்மானிக்கவேண்டிய தீர்மானங்களைப் பற்றி யோசித்து நிறைவேற்றிக்கொண்டு சுமார் 3-20 மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று.

பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (தீர்மானங்கள் அடுத்த வாரம்வரும்)

பிறகு அக்கிராசனர் முடிவுரையும் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்கள் வந்தனோபசாரமும் நடந்தது. இரவு 8-30 மணிக்கு மகா நாடு இனிது முடிந்தது. ஒரு நிரூபர்

ஈரோடு தாலூகா போர்டு தலைவரின்

## உருவப்படத் திறப்பு விழா.

சென்ற பிப்ரவரி மாதம் 21-ம் தேதி யன்று ஈரோடு தாலூகா போர்டு தலைவர் பழயகோட்டை பட்டக்கார் ராவ் பஹதூர் நல்ல தம்பிச்சக்கரை மன்றாடியார் அவர்களின் உருவப்படத்தை ஈரோடு தாலூகா போர்டு காரியாலயத்தில் சென்னை மாகாண பிரதம மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் திறந்து வைத்தார். அச்சமயம் கோவை ஜில்லா போர்டு தலைவர் ராவ் பஹதூர் சி. எஸ். ரத்னசபாபதி முதலியார், கோவை முனிசிபல் கௌன்சிலர் ஸ்ரீமான் வி. எஸ். செங்கோட்டய்யா, ராவ் பஹதூர் டி. எ. ராமலிங்கம் செட்டியார் ஆகியவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். கனம் மந்திரியவர்கள் போர்டு நிர்வாகத்தைப் புகழ்ந்து பல அரிய மொழிகள் வழங்கினார். இரவு 8 மணிக்கு போர்டு தலைவர் அவர்கள் பங்களாவில் சமபந்தி விருந்து அளிக்கப்பட்டது. ஒரு நிரூபர்

நாவல் உலகத்தின் ஒளி,

ஸ்ரீலோலன்

ஓர் அரிய இனிய அபூர்வ

துப்பறியும் நாவல்,

விலை ரூ. 1-4-0.

விலாசம்:-

T. S. ராஜம் & சன்,

காஞ்சீபுரம்.

## கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்களின் சங்கம்.

### 8–2–28–உ மீட்டிங் தீர்மானங்கள்.

ஆஜர்.

மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்கள், ராவ்பஹதூர் சி. எஸ். ரத்னசபாபதி முதலியார் எம். எல். சி., டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் பி. ஏ., பி. எல், பி. எஸ். ஜி. கோவிந்தசாமி நாயுடுகாரு, வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள்.

1 மேல் பவானி திட்டத்தை கவர்ன்மெண்டார் தள்ளிவிட்டபடியால், இந்த ஜில்லாவில் பஞ்சத்தால் கஷ்டமடையும் பாகங்களிலுள்ள பழைய குளங்களை மராமத்து செய்யவும், புது குளம் முதலிய ஜலாதாரங்களை கட்டவும், ஒரு தனி பரிசோதனை ஆபீசரை நியமிக்க வேண்டியது தற்கால நிலைமைக்கு மிகவும் அவசியமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2 சர்க்கார் விவசாய விலவிருத்தி சம்பந்தமான கடன்களின் வட்டி வீதங்களில் 5% ஆக குறைத்துவைக்க உத்திரவாக வேண்டுமாய்க் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

3 டை விஷயமாய் சென்ற சென்னை சட்டசபை மீட்டிங்கில் தீர்மானம் கொண்டுவந்த மதுரை ஜில்லாவின் பிரதிநிதியாகிய ஸ்ரீமான் W. P. A. சுந்தரபாண்டிய நாடாரவர்களுக்கும் அதை ஆதரித்து நிறைவேற்றி வைத்த மற்ற கனவான்களுக்கும் இச்சங்கம் மனப்பூர்வமான வந்தனம் செலுத்துகிறது.

4 கோயமுத்தூர் விவசாய காலேஜில் விவசாய இன்ஜினியருடைய தொழிற்சாலையில் ஒரு கடைச்சல் யந்திரம் சீக்கிரத்தில் ஏற்படுத்த வேண்டியது என்பதாக டை டிபார்ட்டுமெண்டு அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

5 இச்சங்கத்தின் சென்ற ஆகஸ்டு மாதத்திய மீட்டிங்கின்வேறு தீர்மானத்தை அனுசரித்து முனிசிபாலிடியிலுள்ளவர்களின் கால்நடை, குதிரைகளையும், வெளியூரார்களின் கால்நடைகளையும் அபராதம் விதிக்கப்பட்டதின்பேரில் ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை செய்துகொள்ளும்படி கட்டாயப்படுத்தக் கூடாதென்பதைப்பற்றி மறுபடியும் டை சங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

நல்ல தம்பி சர்க்கரை மன்றாடியார்,
அக்கிராசனாதிபதி.

வி. சி. வெள்ளிங்கிரி கவுண்டர்,
கௌரவ காரியதரிசி.

---

இனாம்! 25 புஸ்தகம் இனாம்!!

### எழுத்துமாறிய வார்த்தைகள்.

(1) கிக்தே பார்காசைம்.
(2) பலயயாதி தகப்ர்ரைகான சபமான்றபி.
(3) தங்கர்பானைபாம்தே பாயுப்எம்.
(4) எவசுயாழாதேஆ அனைமிவாறன்.
(5) போதப்ற்றாலைபல்கை புற்தேட்.
(6) எகுரசொலாத்தின் ஜன்ல்தே.
(7) வுழாடிமைவா அவாழ்தே.
(8) ரியாயைதசுமயப்பேதை.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் 30-3-28 தேதிக்குள் சரியான விடுவிப்புகளை ஒரு காகிதத்தில் தெளிவாக இங்கியால் எழுதி அடியிற் கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டியது. சரியான விடுவிப்புகளை ஒன்றாக குலுக்கி எடுத்து பிரைஸ் விழுந்த நபர்களுக்கு "இந்து கோவில்களின் பரிதாப நிலைமை" என்ற புத்தகம் 25 இனாமாக அனுப்பி வைக்கப்படும்.

திரு. இராவண தாசன்,
சிவாஜி காரியாலயம்,
பெரிய பஜார், திருச்சிராப்பள்ளி.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுபோன இந்திரியத்தை கெட்டிபடுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

நலம்! நயம்!! நம்பிக்கை!!!

இம்மூன்றும் ஒருங்கே கிடைக்கும்.

நூதன நகை வியாபாரிகள்,

மெஸ்ஸர்ஸ். எட்வர்டு அண்டு கோ,
நவீன நகை வர்த்தகசாலை,
178, 179, சைனாபஜார் ரோட், சென்னை, G. T.

எவ்விதமான பொன், வெள்ளி நகைகளும், வைரக்கல் கட்டட வேலைகளும், கைதேர்ந்த வேலையாட்களையும், பெகாட்டு நூதன மெஷின்களைக் கொண்டும் மிக உறுதியாயும், அபூர்வ வேலைப்பாட்டுடனும், குறிப்பிட்ட கால அளவில் செய்து கொடுக்கப்படும்.

உடனே! ஒருமுறை பரீட்சை செய்து பார்த்து பலனடையுங்கள்.

T. V. சுப்பிரமணியம், மானேஜிங் டைரக்டர்.

சோதிடமா! சித்தா!!

கவிகள் நிறைந்த சர்டிபிகேட்டுகள்!!!

பால சோசியம்.

கனவான்களே மாயவரம் டவுனில் உள்ள சோதிட சாஸ்திரிகள், தர்மபுரம், திருவாடுதுறை ஆதீன ஏஜண்டுகள், டையூர் முனிஸிபாலிடி மெம்பர்கள், ஜில்லா போர்டு மெம்பர்கள், மாயவரம் டவுனிலுள்ள வேண்டிய அறிஞர்களின் சர்டிபிகேட்டுகள் ஓரே ஊர் சர்டிபிகேட்டுகள் ஏராளமாகப்பெற எவராலும் முடியாது என் சர்டிபிகேட்டைப் பெறவேண்டுமானால் ஒரு அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். சர்டிபிகேட்டைப் பார்த்துவிட்டீர்களேயானால், என்னைப் பார்க்காமலிருக்க மாட்டீர்கள்.

ஹிப்னாடிசம், மெஸ்மரிசம் முதலிய மாந்திரீகத்திற்கும் எழுதலாம்

தேசபக்த V. சுப்ரமணியன்
வள்ளலார் கோவில் மாயவரம்.

## திருச்சி நகர சுயமரியாதைச் சங்கம்.

திருச்சி பெரியகடை வீதியிலுள்ள சண்முக விலாச காப்பி கிளப் மேல்மாடியில் 21-2-28 மாலை 6 மணிக்கு பூவாளூர் திரு. ஸா. சு. மு. செல்வக்கணபதி செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. திருச்சி நகரத்திற்கென சுயமரியாதைச் சங்கம் நிறுவவேண்டிய அவசியத்தைப்பற்றி திருவாளர்கள் க. ம. சி. பரமசிவம் செட்டியார், மணவை ரெ. திருமலைசாமி, இ. கலியபெருமாள், இராவணதாஸ் முதலியவர்கள் பேசினார்கள். பின்னர் காரிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பெற்று டை சங்கம் நிறுவப்பெற்றது.

காரிய நிர்வாகிகள்:—

திருவாளர்கள்

1. ம. ஆழ்வார் செட்டியார், தலைவர்.
2. க.ம.சி. பரமசிவம் செட்டியார் துணைத்தலைவர்
3. மணவை ரெ. திருமலைசாமி, அமைச்சர்.
4. இ. கலியபெருமாள் நாயுடு, துணை அமைச்சர்.
5. த. இராவணதாசர், பொருளாளர்.

பின்னர் கூட்டத்தினர்களுக்கு கற்கண்டு, சந்தனம், தாம்பூலம் வழங்கப்பெற்று இரவு 9 மணிக்கு சபை நிறைவுற்றது.

5-ம் பக்கத் தொடர்ச்சி.

ரக்கன்" என்கிருர். மேலும் இவன் அகத்தியரால் இறப்பதற்கு ஓர் காரணமும் கூறுகிருர். அதாவது சுந்தன் அகத்தியர் வாழ்விடமடைந்து அங்கிருந்த மரங்களையெல்லாம் பறித்து வீசினன், ஆதலால் சினமிகக்கொண்டு முனிவர் "தழுலெழவிழித்தனர். சாம்பராயினன்" என்பதே. இவ்வாலாற்ருல் அகத்தியர் அற்பகுணமுடையவராகக் காட்டப்படுகிருர். புத்திமானுன சுந்தன் என்று முதலில் கூறிய வால்மீகி அதற்கு மாருக அவனை அறிவில்லாதவனுகக்கூருமல் காட்டுகிருர். ஓர் காரணமும் கூருது அவனை அகத்தியர் கொல்வதாகக் கூறி அகத்தியருக்கு ஓர் பெருங்குணக்கேட்டை யேற்றுகிருர். அகத்தியரோ தமிழ் முனிவர். இவரே தமிழுக்கு சிவபெருமான் திருவருளைப் பெற்று முதன் முதல் இலக்கணமியற்றியவர். ஒல்காப்பெரும் புகழ்த்தொல்காப்பியர் முதலிய சிறந்த தமிழ்ப் புலவர்களுக்கு ஆசிரியர். இந்தத் தமிழ் முனியைக்குணக்கேடாக அறிவுடையவருக்குக் காட்டவே ஆரியராகிய வால்மீகி இவ்வாறு எழுதினர் போலும், கம்பர், வால்மீகி கூருத காரணத்தைக் கூறுகிருர். அதுவும் வியப்பாகவே இருக்கிறது. மரங்களை முறித்தெறிந்ததற்காக ஒருவனை விழித்துச் சாம்பராக்குவதென்ருல் அவர்தம் பெருந்தன்மையும் பெருந்தவமும் இருந்தவாறென்னே? ஈதெல்லாம் பெருந் தமிழ்ப் புலவராகிய அகத்தியனுர் பாலிருந்த அழுக்காற்ருல் ஆரியா கட்டிய கதை யென்றே தள்ளுதல் வேண்டும்.

தாடகைக்கு ஒரேமகன், அவன் மாரீசன். சுபாகு என்பவன் வேரொரு அரக்கன். அவன் மாரீசனேடு கூடி இராவணன் ஆணையால் வேள்விகளைக் கெடுத்து வந்தான். இவனைக் கம்பர் தாடகையின் மகன் என்ருர் இது வால்மீகி கூற்றுக்கு முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. சுந்தன் இறந்தது தெரிந்து தாடகை ஓடிவருகிருள். அகத்தியரைக்கொல்ல மாரீசனும உடன் வருகிருன். அதுகண்டு அகத்தியர் இயல்பில் பலமில்லா இயககனுகிய அவனை மிகுந்த பலமுள்ள அரக்கனுகுமாறு சபிககிருர். அவ்வாறே இயல்பில் ஆயிர யானை பலமுடைய தாடகையை மிகுந்த பலமுள்ள அரக்கியாகுமாறு சபிக்கிருர் எதிரிக்குப் பலமழியுமாறு சபிப்பதே அறிவுடையார் செய்கை. மிகுபலம் வாய்க்குமாறு அகத்தியர் சபித்தாரென்பது அறிவுடையார் ஒப்புமாறில்லை. இது வேண்டுமென்றே அவர்மீது அறியாமையேற்றச் செய்ததாகும். மேலும் மரங்களை முறித்தெறிந்த ஒருவனைச் சாம்பராக்கிக் கொன்ற முனிவர் தமமையே கொல்லவந்தவர்களைக் கொல்லாது விடுகின்ருர் என்பதும வியப்பபே அகத்தியர் சாபத்தால் மிகுபலம்பெற்ற தாடகை, அகத்தியர் வாழ்ந்த வனத்தில் அது முதல் வாழ்ந்து அதனைப்பாழாக்கி வந்தாளென வால்மீகி கூறுகிருர். இதனல் தம் தலையில்தாமே மண்ணைவாரிப்போட்டுக்கொண்ட அகத்தியர் அவ்விடம்விட்டு வேறிடம் புகுந்தவராதல் வேண்டும். என்னே ஆரியககூத்து? "இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்" என்ற சீரிய கொள்கையுடைய தமிழ் மக்களிற்றலை சிறந்தமுனிவராகிய அகத்தியனுரா இவ்வாறு நடந்திருப்பார்? பெரும் புழுகோ இது நிற்க.

மூன்று கோடி ஆண்டுகளுக்கு மேலாக தவ வாழ்ந்திருந்த மிக்ககிழவியாகிய தாடகையைப் பதினறு வயது வாலிபனுகிய இராமன் கொன்ருன். முதலில் கைகளை வெட்டினன இராமனென்றும், இலக்குவன் அவளுடைய காதுகளையும், மூக்கையும் வெட்டினனென்றும் பின்னர் இராமன் அவளைக்கொன்றன னென்றும் கூறுகின்றனர் வால்மீகி. இவ்விரு வீரரின் வீரத்தான் யாதோ! என்ன வீரமோ? மிகப் பழுத்த கிழவியாகிய தாடகையை இரண்டுவாலிபர் கூடிக் கொல்வது மிகப்பெரிய வீரமென்ருே? அதிலும் அவள் பெண்பால். இதனுலேயே பெரும் புலவராகிய கம்பரும் தமது அபிப்பிராயத்தைக் கூனிவாக்காக அயோத்தியா காண்டத்திலே பின் வருமாறு கூறுகின்ருர்.

"ஆடவர் நகையுற ஆண்மை மாசறத்
தாடகையெனும் பெயர்த் தையலாள் படக்
கோடிய வரிசிலை இராமன்."

இலக்குவனது இழிந்த செயலைக் கம்பர் கூறுகின்றிலர். மேலும் விசுவாமித்திர முனிவன் இராமனை நோக்கிப் 'பெண்ணுயிற்றென்று பாராதே முன்னர் இந்திரனெருபெண்ணைக் கொன்ருன், திருமால் ஒரு பெண்ணைக் கொன்ருர் ஆதலின் நீயும் இவளைக்கொல்" எனக்கூறியதைத் தாடகை தோன்றுவதன் முன் கூறுகிருர். ஆனல் கம்பரோ இச்செய்தியைக் குமாரனுகிய இராமனுக்கும், கிழவியாகிய தாடகைக்கும் நடந்த போர் நடுவில்கூறியதாகக் கூறுகிருர். பெண்ணைக்கொல்ல ஏவும் விசுவாமித்திரன் இழிந்த அறிவுதானென்னே?

விசுவாமித்திரன் வேள்வி தொடங்கிய போது சுபாகு, மாரீசர்பல அரக்கரோடு வந்து தடுத்தனர். தாடகையும் வேள்வியை முனிவா செய்யும்போது தடுத்துவந்தனளெனத் தெரிகிறது. ஆரியர் மிலேச்சரென்கிறதுநிகண்டு ஆதியில்ஆரியர் குதிரை, கழுதை, நாய் முதலிய மிருகங்களை அடித்துத்தின்று வந்தனர் பின்னர் அவர்கள் தம் தெய்வத்துக்குப் பிரீதி என்று சொல்லி வேள்வி என்ற பெயரைவைத்துக்கொண்டு ஆடு மாடுகளைத் தின்று வந்தனர். இந்த இராம கதையிலும்கூட தசரதன் செய்த பரிவேள்வியில் பல பசுக்களையும், குதிரையையும், பாம்பு, ஆமை முதலிய அற்பமான உயிர்ப் பிராணிகளையும் தின்றனரென்றும் சோமரசமாகிய கள்ளைப் பருகினரென்றும் தெளிவாக அறிகின்ருேம்.

தமிழ் மக்களோ கொல்லாவிரதமே குவயமெல்லாம் ஓங்க வேண்டுமென்னும் சீலமிகவுடையோர். தம்முயிர் நீப்பினும் தாம் பிறிதின்னுயிர் நீக்கும் வினைபுரியார். பசுக்கொலைபுரிந்து ஆயிரம் வேள்வியைச் செய்தலினும் ஒன் றன் உயிர் செகுத்துண்ணுமை நன்று எனக்கொல்லா நோன்பாற்றுபவர். நன்னயஞ் செய்தலையே தமக்குத் தீமை செய்தோரை ஒறுக்கும் வழியாகக் கொண்டொழுகுபவர், ஆதலின் இவர்களுக்கு ஆரி

6-ம் பக்கத் தொடர்ச்சி.

" அடே! கன்னு நீ மன்னர் குலத்தைச் சார்ந்தவன். அன்றேல் நீ இவ்வாறு பொறுத்துக்கொண்டிருக்க மாட்டாய். நீ பிராமணன் என்று என்னிடம் பொய் கூறியதற்காக கற்ற வித்தைகளையெல்லாம் மறந்து விடக் கடவாய்" என்று சாபமிட்டாரென்பதும் இக்கதையின் போக்கு. ஆகவே பொய்பேசினுல் கன்னனைப்போல் துன்பமுழப்பீர்களென்று அறிவு புகட்டப் படுவதுடன் இப்பாடம் முடிவு பெறுகின்றது.

மிக்க அழகான கதை. கற்ற வித்தையைக் கன்னன் மறந்திருப்பானே வென்று மனேதத்துவ சாஸ்திரமுடையாரும் (Psychologists) இராமாயணத்திற் சொல்லப்பட்ட பரசுராமரும் பாரதத்திற் சொல்லப்பட்ட கன்னனும் ஒரே காலத்தவரா என்று இந்திய நாட்டு வரலாற்று ஆராய்ச்சிகளுடையாரும் ஆராயத்தக்கவை. இவைபோக,

'அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்
(கும்
செந்தண்மை பூண் டொழுகலான்'

என்னும் அருள் வாக்கிற்கிலக்காவார் இப்பாசுராமர் தாம் போலும்? ஆ! எத்துணைச் செந்தண்மை! கன்னன் தன் ஆசிரியன் பால் வைத்த அன்பிற்கோ இச்சாபம் பிறந்தது. 'சாதிச் செருக்கு' என்றும், 'பிராமணக் கொடுமை' என்றும், 'எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்

செய்ந்நன்றி கொன்ற மகற்கு' உய்வில்லை

என்னும் இப்பாடத்திற்கு மகுடம் தந்தால் எத்துணைச் சால்புடைத்தாயிருக்கும். 'குரு பக்தி'

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்றும்

'பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்குமெனின்'

என்றும் தலைப்புத் தந்தால், எவ்வளவு இசைவாயிருக்கும். உண்மையில், கன்னன் மெய்யாக நடந்து கொண்ட தற்காகவே சபிக்கப்பட்டான். வண்டினை எங்கேயோ பார்த்த உடனே பரசுராமரின் தலை பிளந்துடைந்து போம்படி தரையில் போட்டு விட்டு கன்னன் எழுந்திருந்து குதித்திருப்பின் பரசுராமர் தன் தலையை பிளந்ததையும் பாராது மகிழ்ச்சி மீக்கூர "ஆ! சரியான பிராமணனுக்குப் பாடங் கற்பித்த என் தவப்பெருமை என்னே! என்னே" என்று வியந்து இன்னும் பலவாறு கன்னனை வாழ்த்தியிருப்பார்.

இது தேசியக் கல்வியாம், சமயபோதனையாம்.

---

யர் செய்துவந்த பசுக்கொலை வேள்வி எவ்வாறு உடன்பாடாகும்? தமிழ் மக்கள் ஆரியர்வேள்வி செய்த இடந்தோறும் சென்று தடுத்தனர். கொலை வேள்விகளைத் தடுப்பதில் தம்முயிர் போயினும் பெரிதென மதியாது தமிழ் மக்கள் கொலையைத் தடுத்து வந்தனர். மற்ற வேளைகளில் ஆரியருக்கு அவர்கள் யாதொரு கெடுதியும் புரியார். விசுவாமித்திர முனிவன் செய்த வேள்வியிலும் மாரீசன் சாதாரணக் கிரியைகள் நிகழ்ந்த ஐந்து நாளும் வாாமல் கொலை புரிந்து அவிசொரியும ஆறும்நாளே வந்து கொலையைத் தடுக்கின்ருன். இதனுலேயே மாரீசன், இராவணன், தாடகை முதலியோரை ஆரியர் கேவலமாகக் கூறிவந்தனர். அதனை வால்மீகியும் எழுதினர். இதனை இராவணனைப்பற்றி வருமபோது விவாமாக ஆராய்வோம். (தொடரும்)

பார்த்தீர்களா! இரகசிய நூல்! படித்தீர்களா!

ஹிப்னுடிஸ மெஸ்மெரிஸ மென்னும்

# மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அநுபவ படைந்தது, மனதை அடக்குவது, யோக சித்தி அடைவது, தம் இஷ்டம்போல் பிறரை நடத்துவது முதலான மனோவசிய இரகசியங்களும், அதை அப்பியசிக்க வேண்டிய முறைகளும் தெளிவாய் விவரிக்கப்பட்டிருப்பதுடன் சர அசர பேதமான உலகத்தையே தம் வயப்படுத்தல், அநேகமாயிர மைல்களுக்கப்பாலுள்ள நாடுகளில் நிகழும் விஷயங்களை யறியும் ஞானத்தைப்பெறல், ஔஷதமின்றி வியாதிகளைப் போக்கல், திரிகால வர்த்தமானங்களைத் தெரிந்து ஆனந்திக்கும் நிலையை யடைதல், பிறரைத் தன் வயப்படுத்தல், ஹிப்னுடிஸம் மெஸ்மெரிஸம், திடச்சித்தப் பயிற்சி, ஜனவசியம், மனோவசியம், ஜீவப்பிராணிகளின் வசியம், தூரதிருஷ்டி, தூரசிரவணம், விஷஜெந்துக்களின் விஷத்தை நீக்குதல், பிறருடைய மனோ நிலையைக் கண்டுணர்தல், பிரேதங்களைக் கண்டு பேசல், அன்னியர்களுக்குத் தோன்றாது மறைதல், ஞானதிருஷ்டி, ஜீவமின்சார விளக்கம், தூக்கத்தில் நிகழ்த்தும் பல அரிய ஆச்சரியங்கள், ஹிப்னுடிஸ வைத்தியம், காந்தவைத்தியம், பிராணாயாம யோக அப்பியாசம், ஏகாந்தநிலை, விளக்கைகாட்டி பிறரை தூங்கவைத்தல், எவ்வித விஷயத்திலும் ஜெயம் பெறுதல், தூரத்திலுள்ளோரை யருகில் வரவழைத்தல், ஆஞ்சநேயர் வசியமூலமந்திரம், உபாசனை இது போன்ற பல மனோவசிய முறைகளும் ஒவ்வொருவரும் பழகி இன்புறும் வண்ணம் மிகத் தெளிவாய் பல சித்திரப் படங்களுடன் வெளி வந்துள்ளது. ஹிப்னுடிஸம மெஸ்மெரிஸம் (மனோவசிய இரகசிய சாஸ்திரம்) என்கிற வித்தையில் தேர்ச்சி பெற்ற ருஷியா—ராஸ்புட்டீன் அடைந்த மனோவசிய சக்தியைக்கொண்டு அவர் என்ன அரிய பெரிய காரியங்களை சாதித்தார் என்பது எல்லோர்க்கும் தெரியவேண்டி அவருடைய சரித்திரத்தை சுருக்கமாகவும் இதில் எழுதப்பட்டுள்ளது.

அழகான பைண்டு, சுத்தமான பதிப்பு. 208 பக்கங்கொண்ட நேர்த்தியான புஸ்தகம். விலை ரூ. 1—8—0

வி. ஜே. வேலு அண்டு கம்பெனி, சூளை போஸ்டு, மதராஸ்.

## விற்பனை.

மகாத்மா காந்தியடிகளின் தமிழ்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திற்காக வென்று புதுமாதிரியாகத் தயாரிக்கப்பட்ட டாட்ஜ் மோட்டார்கார் விலைக்கு விற்கப்படும். நெடுந்தூரம் பிரயாணத்திற்குப் படுக்கை வசதியும், பெட்டி, தண்ணீர்த் தொட்டி, பின்புறம் சாமான் வைக்கும் வசதி முதலியவை வற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதுவரையில் 3500 மைல் மாத்திரமே ஓடியிருக்கிறது. புத்தம் புதிதாகவே ஜாக்கிரதையாக வைக்கப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் ஈரோடு சர்க்கா சங்க காரியாலயத்தில் நேரில் பார்வையிடலாம். விலை அதிகம் கோருவோருக்கு விற்கப்படும். திருச்செங்கோடுகாந்திஆஸ்ரமம் ச. ராஜகோபாலாச்சாரியாருக்கு எழுதிக்கொள்ளலாம்.

எஸ். ராமநாதன்,
காரியதரிசி, சர்க்காசங்கம், ஈரோடு.

—:0:—

## பல்லடம் தாலூகாபோர்டு தேர்தல்.

நாளது பிப்ரவரி 23௳ நான்கு ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களாக ஏழு கனவான்கள் நின்றார்கள்.

அதிக ஓட்டுப்பெற்ற ஸ்ரீமான்கள் S. K. கருப்பணத் தேவர், S. L. வெங்கடாசலத் தேவர், R. வெங்கடாசலக் கவுண்டர், A. V. ஸ்ரீனிவாச நாயக்கர் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஒரு நிருபர்.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

# மின்சாரரசம்.

சகல வியாதிகளுக்கும்
தேவாமிர்தம் போன்றது.

பத்தியமில்லை! அநுபானமில்லை!

S. T. ஆதியத்தன் B. A.
ஆர்டிஸ்ட்,
சென்னை:-

எனக்கு 2 வாரமாக மலகுவலியுடன் வயிற்றுப்போக்கு தொந்திரவு பண்ணிக்கொண்டிருந்தது. ஒரு தடவை மின்சாரரசம் சாப்பிட்டதில்கடும்வலியை உடனே நிறுத்தியது பின்னும் 2 நாள்தொடர்ந்து சாப்பிட்டதில் ஷை நோய் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டது

A. G. முத்தையா B A.
தாசில்தார்,
கோவில்பட்டி:-

இந்த ஔஷதம் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. டாக்டர்களுக்கு செலவிடும் பணத்தை இது மிதிசெய்துவிடும். எல்லா வியாதிகளுக்கும் மின்சாரரசம் தேவாமிர்தம் போன்றதென்னும் பெயர் இந்த மருந்துக்கே தகும்.

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக்
கணக்கில் ஆச்சரியகரமாக
குணமடையலாம்.

சிறு குழந்தைகள் முதல் சகல வயதினரும்
உபயோகிக்கலாம்.

ஒரே முறை பரிக்ஷியுங்கள். நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.
கணக்கற்ற நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

புட்டி 1-க்கு ரூ 2. தபாற் செலவு வேறு.
எல்லா ஊர்களிலும் கிடைக்கும். கேட்லாக் இனும்.
விலாசம்:- மின்சாரரசம் கம்பெனி (லிட்.) சேலம்

1928 1928

# இந்துசமயக் காலண்டர்.

## ஒரே காலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!

ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.

நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணாடி போடத் தகுந்ததாய் அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

1 திருமகள்
2 கலைமகள்
3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5 பார்வதி பரமேஸ்வரன்
6 மகாவிஷ்ணு
7 ஷண்முகம்
8 பாலகிருஷ்ணன்
9 இராதாகிருஷ்ணன்
10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல்
11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்
12 காளிங்கமர்த்தனம்
13 துருவன் அருள்பெறுதல்
14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

## இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

585, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

3ம் பக்கத் தொடர்ச்சி

அவை ஒழிந்தால் வரும் தீமை என்ன? இவை இல்லாத தேசத்திற்கு இது வரையிலும் வந்த நஷ்டமென்ன? அவர்கள் முன்னோர்களெல்லாம் நரகத்திலா கிடக்கிருர்கள்? என்றே 'குடி அரசு' கேட்கிறது.

சிவ இதிகாசத்திலிருந்தும் வைஷ்ணவ இதிகாசத்திலிருந்தும் இரண்டு கதைகளை உங்களுக்குச் சொல்லுகிறேன். சிவன் பார்வதியைக் கலியாணம் செய்து புத்திரனை அடைய நூறு தேவ வருடம் பார்வதியைப் புணர்ந்தார். வீரியம் வெளிப்படவில்லை. இதைத் தேவர்கள் கண்டு "இத்தனை காலப் புணர்ச்சிக்குப்பின் கெர்ப்பமுண்டானால் பூலோகம் தாங்காது, ஆனதால் போகத்தை நிறுத்தவேண்டும்" என்று சிவனை வணங்க அப்படியே செய்கிறேன் என்று புணர்ச்சியில் வீரியத்தை விடாமல் நிறுத்துகையில் சிந்தின வீரியம பூமியில்பட பூமிதாங்காமல் அக்கினி பகவானின் உதவியால் சுப்பிரமணியர் உற்பவிக்க அது கண்டு பார்வதி தனக்குக் கிடைக்கும் புத்திர பாக்கியத்தை கெடுத்த தேவர்களுக்கும் தன் புத்திரனைப் பெற்றுக்கொள்ள பூமிக்கும் சாபம் கொடுத்தாள் என்னும் கதை வால்மிக ராமாயணத்திலுள்ளது. சிவனால் சலந்திரா சூரன் கொல்லப்பட, விஷ்ணு அந்த சூரன் உடலுக்குள் புகுந்து சூரன் பெண்ஜாதியான விருந்தையை கூடியிருந்தார். விஷ்ணுவின் வஞ்சனையை விருந்தை தெரிந்து, 'விஷ்ணுவே உன் வஞ்சனையால் என்னைப் புணர்ந்தனை, ஆதலினால் உன்னுடைய பெண்ஜாதியை பகைவர்கள் கவர்ந்து அதனால் நீ பெரும் பழி சுமக்கக்கடவாய்' என்று சபித்து அக்கினிப் பிரவேசம் செய்தாள். விருந்தையின் பிரிவை விஷ்ணு சகிக்காமல் அவள் வெந்த சாம்பலில் புரண்டு கொண்டிருந்ததை தேவர்களால் கேட்ட பார்வதி துளவம் என்னும் பெண்ணை உண்டு பண்ணிக் கொடுத்தார். விஷ்ணு விருந்தையின் ஆசையை நீக்கி துளபமென்னும் பெண்ணோடு பல போகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார் என்று கந்தபுராணம் சொல்லுகிறது. ராமாயணத்திற்கு கர்த்தா வால்மீகியும் நாரதரும். கந்த புராணத்திற்கு அதிகாரிகள் வியாசரும் சூதக முனிவரும். இவர்கள் மகரிஷிகள். பெரியவர்கள். இவர்கள் சொல்லுவதைப் பொய்யென்றால் நாஸ்திகம் வந்து விடும். இதை மெய் என்கிறவர்கள் தானே ஆஸ்திகர்கள்? இந்த கதைகளைக்கூடப் படிக்கக்கூடாது. சூத்திரர்கள் பார்ப்பானால் சொல்ல பக்தியோடு கேட்கவேண்டும் என்றல்லவா விதியும் செய்யப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட ஜாதியார்கள் கோபுரத்தில் அடித்து வைத்திருக்கும் சாமியைப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்பது போல் இந்த புராணங்களை ஆரியப்பிராமணர்களே தான் சொல்லவும் மொழி பெயர்க்கவும் வேண்டுமென்று வால்மிகி ராமாயணம் மொழிபெயர்த்த சிலஅய்யங்கார்எழுதிவைத்தது உங்கள் முன்னால் நிற்கிறதே. இதன் உண்மைகளை 'குடி அரசு'ம் அதன் பிரசாரமும் சொன்னால் பார்ப்பானுக்கில்லாத ஆத்திரமும் அவசியமும் 'தமிழ் நாடு' பத்திரிகைக்கும் சில சங்கங்களிலுள்ள சிலருக்கும் ஏன் வர வேண்டும்? கமால் பாட்சாவைப் போன்ற வீரர்களின் சட்டதிட்டங்களைக் கேட்டும், அமெரிக்காவுக்கு முதல் முதல்போன ஜாப்பானியனுன கிமாவின் சரித்திரத்தைப் படித்து ஜப்பான் அடைந்த கீர்த்தியும் ஆப்கான் அமீரின் பிரசங்கத்தை பத்திரிகை சொன்னதையும் தமிழர்கள் படிக்கவேண்டிய 'ஞான சூரியன்' என்னும் புஸ்தகம் பரவிக்கொண்டு வருவதையும் 'குடி அரசு' பார்த்துக் கொண்டு வருகையில் பயமும் பாவமும் 'குடி அரசு'க்கு எப்படி வரும். தொடரும்.




நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல் தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி சி. எம். சாமி

# குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ 16. 6 நாள் புட்டி ரூ. 4. வி. பி. சார்ஜ் வேறு

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இச்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று அழுதார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமெல்லும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம உண்டாவதற்காகக் கொடுத்து வந்தேன். மேற்படியாருக் குபூரணபழையபலம்ஏற்பட்டுவியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெருமையையும அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடிந்த பெருமுறை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரிழிவுக்கு கைகண்டது புட்டி 15ரூ.
" " நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1க்கு 4. ரூ.
பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2. ரூ.
பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூ அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.
ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

## C. மலையப்பசாமி

நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி.டி. சென்னை.



## இனம்! 1928 வருஷ காலண்டர்!! இனம்!!!

கட்டி வெள்ளி நகைகள் சுத்தமானவேலை.

எங்கள் கம்பெனியில் உங்களுக்கு வேண்டிய முாசுகுத்தி ஒத்தை இரட்டை கெங்காதரக்கொடி, முத்துசெயின், புதுச்சேரி புளுதண்டை, சாதாசெயின், கைகோர்வை, அரணுக்கொடிகளும், இமிடேஷன் பட்டைசிகப்பு கம்மல் கடுக்கன், தோடு, மோதிரம், மூக்குத்தி, வகையருக்களும், இன்னும் இதில் கண்டிராத வெள்ளி, பவுன், நகைகளும ஜவுளிவகைகளும இருக்கிறது. வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலைவிபரம் தெரிவிக்கப்படும்.

விலாசம்

வி. ஜெ தணிகாஜலம் அன்டு கம்பெனி.
சராப் அண்டு ஜவுளி வியாபாரம், குகை, சேலம் (S India)



## பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| நெ. 1. | 6 முழ நீளம் | 3 முழ அகலம் | ரூ. 15. |
| 2. | " | " | 12. |
| 3. | " | " | 10. |
| 4. | 5 " | $2\frac{1}{2}$ " | 8. |
| கம்பளித் தொப்பி நெ. | 1 | உருப்படி 1-க்கு | 3-8-0 |
| ஷை | 2 | ஷை | 2-8-0 |
| " | 3 | " | 2-0-0 |

பட்டு பீதாம்பர கம்பேனி, காசி.



## இனம்! 1928 இனம்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாங்கள் 1928 வருஷ காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால் செலவின்றித் தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பேனி,
போஸ்டு முல்லச்சேரி, மலபார்.



## "அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்திரப் பத்திரிகை

வருட சந்தா தபாற்கூலி உள்பட 6 அணா

மாதிரிப்பிரதி இனம்.

'அறிவுவிளக்கம்' ஆபீஸ், உடுமலைப்பேட்டை.

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)



தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷை கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், சிறந்ததும், கல்விமானதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

300 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0
வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

# மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

### ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்

## "லயன் பிராண்ட் சுத்தமான காப்பித்தூள்"

மெஷின்களினால் தயார்செய்தது. உலகப் பிரசித்திபெற்றது.
மிக உயர்ந்தது. சுகந்த வாசனையுடையது. ருசிகரமானது.
சூபர்பைன் புளு லயன் காப்பித்தூள் 7 பவுன் டின் 1-க்கு ரூ. 10—4—0.
" 4 பவுன் டின் 1-க்கு 6—4—0. " 1 பவுன் டின் 6-க்கு 10—0—0.
வி. பி. தபால் அண்டு பாக்கிங் சார்ஜ் இனாம்.

எங்களிடம் இன்னும் பல ரகங்கள் 1/8, 1/4, 1/2, 1, 2, 4, 7, 14, 28, 56 பவுன் டின்களில் பாக்செய்து மொத்தத்திலும் சில்லரையிலும் விலை சரசமாய் கிடைக்கும். விபரங்களடங்கிய விலை ஜாப்தாவிற்கு உடனே எழுதுங்கள்.

லயன் பிராண்ட் காப்பி மான்யூ பாக்சரிங் கம்பெனி,
கண்ணங் குறிச்சி P.O. (சேலம் ஜில்லா).

## அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவால்டி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரங்குள்ள கம்பி ரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளி தினுசுகளில் வெள்ளை 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை குமால்களும் ஷை நெம்பர்களில் 2½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நயின் கோடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஷ், பேன்ஸி சிகப்பு, ரோஸ் கலர்களில் 5 அகலம் 18 முழம் நீளம் பலவிதமான பேட்களையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும் தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம், மேட்டுப்பாளையம்.

## டிடக்டாஸ்கோப் அல்லது துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

## பெண்களுக்கு அழகு.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு, ஸைப் கலர்கள், கெட்டிச்சாயம். பளபளப்பான வசீகரத் தோற்ற முள்ளது.

18 மு. x 48 இஞ்சு கலர் புடவை ரூ. 4—4—0
ஷை சன்னடி " ரூ. 4-12—0
18 மு. x 44 இஞ்ச கலர் புடவை ரூ. 3—8—0
ஷை சன்னடி " ரூ. 3-12—0

புதிய ஜவுளி கேடலாக் இனாம்!

Te Madura Oriental Trading Co,.
Laxmi Cloth Store, MADURA

அநேக காட்சிகளில் பொன், வெள்ளி மெடல்கள் பெற்ற

## விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள். கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக்கெட் 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாயபு,
ஹைட்கர்சன் தோட்டம், சேலம்.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞல ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

## ஆநந்த குண போதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்த சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் சுவைப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சித்திரங்களின், செவிக்கினிய அலங்கார வசன மாகும். ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான் 5000-சந்தாதாரர்கள் உள்ளது வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரிக்கு இனாம். இது பெரிய ஆபீஸ். உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!!

புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதியிருக்கிறார்.

## முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதுங்கூட சிரிப்பீர்கள். வேண்டுகோள் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,

97, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.

## இரகசியம் வெளியாய் விட்டது

| | | | |
|---|---|---|---|
| இல்வாழ்க்கையின் இரகசியம் ரூ. | ... | 2 | 0 |
| ஸ்திரீ புருஷ இரகசியம் | ,, ... | 1 | 0 |
| ரதி மதன சிங்கார இரகசியம் | ,, ... | 0 | 12 |
| மணவாழ்க்கையின் மர்மம் | ,, ... | 2 | 4 |
| சதிபதிகளின் மர்மம் | ,, ... | 1 | 0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | ,, ... | 1 | 0 |
| கொக்கோகம் | ,, ... | 1 | 0 |
| மதன ரதி ரகசியம் | ,, ... | 1 | 0 |

எஸ். ஆர். பகவான் அண்டு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

## ஞான உதயம்.

ஆபத்தும், சொற்பம்,, முந்துங்கள்,,

(இது ஓர் அருகின் தியானம்)

பக்தர் அங்கீகரித்தது.

பாலர்முதல் விருத்தர்வரை சகலரும் தியானித்து தெய்வ கிருபா கடாக்ஷத்தைப் பெறலாம். பத்திரம் இனியவாக்கியங்களாலானது. பெருந்துக்கங்களை மாற்றியது. இதன் பலன் ஒன்றும் அறுப்பவோம். வெள்ளை கிக்கார்டில் சுத்தமாய் சித்திர வர்ண அழகாய் 9 X 6. அங், அளவுள்ளது, 1, கார்டு விலை, 0—4—0, செலவு 0—3—0..5, க்கு 1 கமிஷன். முன் பணமும் தபால் செலவுகளும் அனுப்பலாம். விலாசம்

கா. மதுரம் சந்தோஷம் (உபா)

கட்டளை, பாலாமடை போஸ்டு

திருநெல்வேலி ஜில்லா.


## பார்ப்பனீயம் ஒழிய குடிஅரசைப்படியுங்கள்.




ரப்பர் ✻ ✻ ✻ முத்திரைகள்.

தங்களுடைய மேல் விலாசம் உள்பட தினசரி தேதி பதிக்கும் ஸ்டாம்பு ரூ 2-8-0. தனி ஸ்டாம்பு குஷன் உள்பட ரூ 2-0-0. 6 சுவாமிகளின் ஸ்டாம்புகள் ரூ2-8-0 வெள்ளி அரக்கு வில் ரூ 2-8-0. பித்தளை அரக்கு வில் ரூ 1-8-0

மேக்கண்ட ஸ்டாம்புகளுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 10x12 பால சுப்பிரமணியர் படம் இனாமாக அனுப்பப்படும்

M. K. SAWMY & CO

Engravers & Rubber Stamp Makers,

Late of Spencer & Co Ltd

Sawmy Naicken Street, Mount Road, P. O. MADRAS

முந்துங்கள்! முந்துங்கள்!!

## 'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

ஆகவே ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்மேல் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 க்கு விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனாம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

Book-Depot, சென்னை.

## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் போட்டோ கார்டுகள் படுக்கையறையைச் சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் பிளேன் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

பிரெஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய வை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

ஸ்ரீ கிருஷ்ண ஏஜன்ஸி,

26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்

## சிங்காரக் குழந்தை—அல்லது— சித்திரக் கள்ளன்.

இதில் சிங்காரக் குழந்தையின் சாமர்த்தியமும் சமயத்திற்கேற்ற நடிப்பும், வீரச் செய்கைகளும். தாசி வலையில் சிக்கிய தன் தகப்பனாரை மீட்பதும், தகப்பனும் பிள்ளையும் தங்கள் சாமர்த்தியத்தைப் பரீக்ஷிப்பதும், தகப்பனார் ஆபத்தில் சிக்கி இறப்பதும், இவனை பிடிக்க முயல்வதும், அரசனை ஏமாற்றிப் பகிரங்கமாய் தன் தகப்பனுடைய ஈமக் கடன்களை முடிப்பதும், கடைசியில் அரசன் மகளையே மணம்புரிந்து அரசு புரிவதும் படிக்கப்படிக்க ஆச்சரியத்தை உண்டாக்கும். நாலணாவுக்கு எத்தேசத்து ஸ்டாம்பானாலும் அனுப்பி பெறலாம்.

ஞானதிருஷ்டி அல்லது திரிகால நிபுணர் அணா 12. எக்கேள்விக்கும் எளிதில் பதிலளிக்கும் ஆச்சரியமான ஆருட நூல். கலியின் கோலம் ஓர் பெண்மணியால் எழுதிய (துப்பறியும் நாவல்) அணா 12.

ஞானகிராம் அண்டு கம்பெனி. வெங்கட்டராமய்யர் வீதி, மதராஸ்


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.